July 1912. Registered No. M. 925.

# செந்தமிழ்ச் செல்வம்

திரிசிரபுரத்து மாதந்தோறும் வெளிவரும்.
ஒரு தமிழ்ப் பத்திரிகை.

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

தொகுதி 2.] பரிதாபி-ஸு ஆடி-மீ 1-உ [பகுதி-4

உள்ளுறை. பக்கம்


| | |
|---|---|
| காலத்தின் கோலம் | 363 |
| விரதமிருப்பானேன் | 367 |
| ஆன்ம இலக்கணம் | 369 |
| ஆசாரத்திரயம் | 373 |
| சிறுவர் பக்கம், கடவுளின் கருணை. | 375 |
| தப்பிக்கொள்ளத் தந்திரங்கண்ட கள்வன் | 377 |
| தமிழ்மறையனாதித்துவம் | 379 |
| அதிரசக்கூற்று | 381 |
| ஆரியர்கள் பால் ஓர் வேண்டுகோள் | 382 |
| புத்தகவரவு | 383 |
| பலதேசவர்த்தமானம் அநுபந்தம் | 384 |
| ஆசாரசீர்திருத்த முறையும்நோக்கங்களும் | மலர் 1 |
| பெண்களுக்குக்கல்வி அவசியமா? | மலர் 2 |


பத்திராதிபர்:—பண்டிதர், அமிர்தம், சுந்தரநாதபிள்ளை.
திரிசிரபுரம்.

வருஷசந்தா ரூ. 1. தபாற்கூலி அணா. 4.
Copy Right Registered.
வெளிநாட்டுக்கு ரூ. 2. தனி சஞ்சிகை அணா. 2.

லெக்ஷ்மி விலாச பிரஸ், திருச்சி.

# செந்தமிழ்ச்செல்வம்

ஒருமாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி-2.] பரீதாபி-ஞு ஆடி-மீ 1-உ [பகுதி-4


## காலத்தின் கோலம்

"காலம்" என்னும் புருடன்செய்யுங் கோலத்தைச்சிந்தித்தற்குஞ் செப்புதற்கும் ஒண்ணாததாயிருக்கிறது. சிறுகுழந்தையைப்பையனாக வும் பையனை வாலிபனாகவும் வாலிபனை விருத்தனாகவும் ஆக்குவது காலமே.

செல்வவானைத் தரித்திரனாகவும் தரித்திரனைச் செல்வவானாகவும் நேயனைச்சத்துருவாகவும் சத்துருவைநேயனாகவும் ஆக்குவதுங் 'கால மே' என்று கற்றோர்பலர் சொல்லக்கேட்டிருக்கிறோம்.

அறிவீனரை அறிவுடையவராகவும் அறிவுடையாரை அறிவீனரா கவும், வீரரைப்பேடியாகவும் பேடியை வீரராகவும் ஆக்குவதுங் "கா லமே" எனப்பெரியோர் ஒருமொழிப்படக்கூறுகின்றனர். காலத்தின் கோலம் இம்மட்டோ எத்தனையோகோடி. அவைகள் சிந்தித்தற்கும் செப்புதற்கும் எட்டாதவெனமுன்னரே கூறியுள்ளோம்.

நிற்க, இந்தியர்களாகிய நமக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்குங் காலம் நம்மை மாறுபடுத்தக்கூடியகாலமே. இக்காலத்தில் நாம் அவசி யம் மாறுபாடடைய வேண்டியதே. மாறுபாடடையாது இருப்போ மானாலும் சிறப்புஞ்சுகமுமில்லை.

இதுபற்றியே பவணந்திமுனிவரும்

"பழைய கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே" எனக்கூறியுள்ளார்.

'உள்ளது போகாது இல்லது வாராது' என்றதருக்க நியாயப்படி பழயனகழிதலாவது புதியனபுகுதலாவது இது என்ன தருக்கநியாய த்திற்குச் சிறிதும் பொருத்தமின்றே? எனக்கூறுவாருமிருக்கலாம் அவர் [illegible]கைப்படி கொண்டாலும் பழயனவும் புதியனவும் உள்ள ன[illegible] என்பது தெளிவாம்.

இதனால் நெடுநாள் பழகிவந்த பழக்க வழக்கத்தைவிட்டு மற்று மொருபழக்கவழக்கங்களைப்புதிதாக வனுட்டிக்க வேண்டுமென்பதே.

பழயனவும் புதியனவும் உலகிற்கு எப்பொழுதும் உள்ளனவே இடபேதங்களால் பழயன போலவும் புதியனபோலவும் காணும் என்பதே.

நம் இந்தியர்கள் பண்டைக்காலத்தில் விவசாயத்தையுங் கைத் தொழிலையும், வியாபாரத்தையும், பெரிதுங்கவனித்துவந்தனரென்று பண்டைக்காலத்தூச் சரிதங்களாலும் நூற்களாலும் அறிகிறோம்.

பிறகு சற்றேறக்குறைய நூறுயிருநூறு ஆண்டுகளாக அவற்றை விட்டு நமதுநாட்டைக்கைப்பற்றிய வேற்று அரசர்கள் கையில் நாம் தேய்வுண்டு தமது முயற்சிகளிற் றேய்வுண்டுபோனார்கள்.

ஆனால் இப்பொழுது நமது ஆங்கில நாட்டவர்கள் காலத்திலோ தெளிவுண்டிருக்கிறார்கள்,

தெளிவுண்ட நம் இந்தியர் மருளுங்கொண்டிருக்கிறார்கள்.

தெளிவு எவ்வகையிலெனில் கல்விமிகுதியும் அறிவு நுண்மை யும் பலதேயப்போக்கு வரவும் பலதேய உணர்ச்சியும் பலதேயமக்க ளின் கூட்டுறவும் ஆகிய இவற்றால் தெளிவு பெற்றுள்ளார்கள்.

மருள் எப்படி எனில் மக்கள் எல்லோரும் ஆங்கிலம் கலாசாலை யிற் கற்றபின் உத்தியோகம் பெறவேண்டும் என்பதுவே முக்கியகட னாகக்கொண்டு முயன்று அவ்வாறே செய்து வருதலாகிய மருளுங் கொண்டிருக்கின்றனர்.

இந்த மருள் தான் கூடாது என்பது எமது விருப்பம். கல்விபயி லுதல் அறிவைப் பெருக்குதற்கே என்று நினைக்கவேண்டும். உத்தி யோகம் பெறுதற்கென்றே படிப்பவர்கள் அதநுண்ணப்புத்திசாலிகளெ னக்கூறத்துணியோம்.

உத்தியோகங் கருதிப்படிப்பவர்கள் உத்தியோகம் பெற்றவுட னே தம்படிப்பைப் பாடசாலையின் படிக்கட்டிலேயே கட்டிவைத்து விட்டு வெறுமாளாக மீள்கின்றன ரென்பதை நம்மவர் அநுபவத்தாற் கண்டதே.

தத்துவசாஸ்திரம் ரசாயனசாஸ்திரம், ககோளசாஸ்திரம், பூகோ ளசாஸ்திரம், கணிதசாஸ்திரம், சரித்திரம் முதலிய பலவகைக்கலைக ளில் முதன்மைபெறமீன்றுபடித்துப்பரீட்சையிற்றேர்ச்சிபெற்று[illegible]ற

ப்புறபட்டம் பெற்றோர்கள் அனைவரும் தங்கள் கலாசாலையை விட்டு நீங்கி உத்தியோகத்திலமர்ந்தபின் அவர்கள் அக்கலைகளால் பெற்றபயன்யாதோ? அக்கலைகள் அவர்வாழ்வுக்கு எத்துணையுதவி செய்கின்றதோ? அவர்கள் அக்கலைகளை எம்மட்டும் ஞாபகத்திற்கொண்டிருக்கின்றனரோ? இவைகளை விவேகிகளே, சற்றுசிற்றம் விட்டமர்ந்திருந்து யோசித்துணருங்கள்.

உத்தியோகத்தில் சிறப்புறவும், மிகநுணுக்கமாகவும், சாமார்த்தியமாகவும் வேலைசெய்யக் கல்விவேண்டும் என்பதற்கையமின்று. அவர்கள் கற்றகலைகள் எல்லாம் அவர்புகுந்த வேலைக்குப்பயன்படுகின்றதா? சிலவேலைக்குச்சாதகமாக சிலசாஸ்திரங்கள் அவசியமாகஇருக்கும்.

உதாரணமாகவபித்தியர் வேலைக்குப்போவோர்க்குரசாயனசாஸ்திரம் (Scienee) அவசியமிருக்கலாம் அவருக்கு மற்றையசரித்திரம் பூகோளம் ககோளம் முதலிய எற்றிற்கு? கணிதசாஸ்திரம்அளவுகடந்து படிப்பானேன்?

இதனால் கலாசாலையிற் பயிலவேண்டாமென்றுவது, உத்தியோகங்களுக்குப்போகவேண்டாமென்றுவது கூறவந்தேமில்லை.

பின் என்னெனில், கலாசாலைகளிற கல்விகற் போர்தம் அறிவை விருத்திசெய்ய வென்றும் பலபொருளையும் நுனித்தாயு நுண்ணறிவைப்பெற வேண்டுமென்றே கல்விகற்றுப்பயிலவேண்டும்.

கற்றபின் உத்தியோகஞ்செய்து பிழைக்க வேண்டுமென்னும் எண்ணத்தையேகொள்ளாது நமது நாட்டிற்கு மேன்மை உண்டாகும்படி முயற்சி செய்யவேண்டுமென்னும் எண்ணத்தைக்கைக்கொள்ளவேண்டும்.

உத்தியோகம் அடிமைத்தொழில் தானே! விவசாயம் முதலியவற்றைகற்றஅறிவாளிகள் செய்தால் கல்லாதார் செய்வதினும் மிக்கலாபம் உண்டாகாதா? இதனினுஞ் சிறந்த தொழிலும் உண்டோ?

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்" என்றும்
"சுழற்றுமேர்ப்பின்னதுலகமதனு
லுழந்து முழவே தலை" என்றும்
திருவள்ளுவநாயனுருங்கூறிப்போந்தனர். கற்றவர்கைத்தொழிற்கண்முயற்சி செய்யக்கூடாதா?

"தொழிலாளிக்குப் பொன்றுறம்பு"

என்பது பழமொழியன்றோ?

## நம்மவர்களே! ஆரியமக்களே! சகோதரர்களே!

பலதேய பாஷையையும் படியுங்கள். பலசாத்திரங்களையும் ஐயமற நக்கற்றுத்தெளியுங்கள்! அடிமைத்தொழிலாகியஉத்தியோகத்தையே நாடியலையாதேயுங்கள்! அறிவை எவ்வகையிலுந் தேடிப்பலப்படுத்தி நுண்ணுணர்வைப்பெறுங்கள். நமது தேசமும் நம்சகோதரரும் முன்னுக்கு வரவழியைத்தேடுங்கள்! இந்தியர்கள் அனைவரும் நம்சகோதரர் என்பதை ஞாபகத்திற்கொள்ளுங்கள்! நீங்கள் பிறந்தது இந்தியாவாகிய நமது தாயைச்சிறப்பிக்க வென்பதை உறுதியாகக்கொள்ளுங்கள்! கல்லாதிருக்கும் நம்சகோதரர்களைக் கற்பிக்க முன்னுக்குவாருங்கள்! கஷ்டப்படும் நம்சகோதரர்களை கஷ்டத்தினின்று நீக்கி உதவிபுரியுங்கள்.

விவசாயம் கைத்தொழில் வாணிபம் இவற்றில் ஊக்கம் வையுங்கள். பீ. ஏ. முதலியபெரும் பட்டம்பெற்றுவிட்டுச்சாகும் வரைஇருபது முப்பது வாங்கிக்கொண்டு அடிமைத்தொழில் செய்து வறுமைப்பட்டு அருமைப்பிறப்பை வீணாக்காதேயுங்கள்.

பீ. ஏ. பரீட்சை செய்தவர்கள் எல்லாம் நூறு ரூபாய் உத்தியோகம் பெறுகின்றார்களில்லை. மிகச்சிலரே இதுபெருகின்றனர். ஐம்பது ரூபாய் தானும் பெறுவது அத்திப்பூப்போல் அருமையாகக்காண்கின்றது; இவ்வைம்பது தானும்பெறுதற்கு இன்னு எத்தனையோ பரீட்சைகள் பீ. ஏ. பரீட்சைக்கு மேல் வேண்டியிருக்கிறது. தற்காலம் உள்ளவர்களுக்கு வயது நூறு என்பது அருமை. ஐம்பதுவயது தான்முழுவயது. இதில் இருபத்தைந்து அல்லது முப்பதுவயது வரை மூளைகரையப்படித்து முப்பது வயதுக்கு மேல் பதினைந்து ரூபாய்உத்தியோகத்திற்குப்போய் முப்பது ரூபாய்வாங்குவதற்குள் கூற்றுவன் கூப்பிடப்பதில் சொல்ல முடியாமற் புறப்பட்டு விடுகிறீர்கள்.

ஒன்றும் படியா நிர்மூடன் சிறுகடைவைத்து மாதம் இருபது முப்பது சம்பாதிக்கின்றான் உங்களினுமதிகமாகவிருக்கின்றான். செல்வவானாகவிருக்கின்றான் உங்களைக்காட்டிலும்நெடுநாள்ஜீவித்திருக்கிறான் ஆகையால் உங்கள் காலத்தையும் பிறப்பையும் வீணாக்காது சேவகவிர்த்தியைவிட்டுவிவசாயம் கைத்தொழில் வியாபாரம்முதலியவற்றைக்கவனியுங்கள்

இந்தியர்களில் ஐந்நூறு ரூபாய்க்கு மேல்சம்பாதிப்பவர் எவ்வளவு கொஞ்சம், ஆயிரம்ரூபாய் சம்பாதிப்பவரோ அதிலும்எவ்வளவு கொஞ்சமாயிருக்கின்றனர்.

கல்வி அறிவு பெற்றோர் வியாபாரஞ் செய்யின் சாமானியராகி வியாபாரம் செய்து மாதத்திற்கு ஆயிரம் இரண்டாயிரம் என்றுசம்பாதிக்கும் நமது இந்திய நாட்டுச்சகோதரர்களிலும் குறையச்சம்பாதித்து விடுவரோ? அதிர்ஷ்டம் என்பது ஒன்றுண்டு என்று கூறுவர், அது எதிலும் உண்டென்பதும் ஞாபகம் வைக்கவேண்டியதே.

**நாவலந் தீவிலுதித்த நன்மணிகளே!**

இந்தக்காலத்திற் கேற்றகோலம் கல்விகற்றல், அறிவைவிருத்தியாக்கல்,விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலியவற்றைவிருத்தியாக்கல், மேலை நாட்டு நாகரீகங்களில் நல்லவையாக உள்ளவைகளையும் கைக்கொள்ளலுமேயாம். இதனை யுணர்ந்து கைப்பற்றி நமதுதேயத்தைச் சிறப்பிப்பீர்களாக.

பத்திராதிபர்.

## விரத மிருப்பானேன்.

எல்லாத்தேயங்களையும்விட நமது இந்தியாதேயத்திலுள்ளவர்களே "விரதம்" என்னும் விஷயத்தை மிகச்சிரத்தையாகக் கவனித்து வருகின்றார்கள்.

எல்லாமதத்தினரிலும் இந்துமதத்தினருக்கே விரதங்கள் மிகுதியாகயிருக்கின்றன. ஒருவாரத்தில் உள்ள ஏழுநாட்களில் புதன்கிழமையும். வியாழக்கிழமையும் தவிர்த்து மற்றை நாட்களெல்லாம் விரததினங்களாகவேயிருக்கின்றன.

விரததினங்களல்லாத புதன் வியாழன்என்னும் இரண்டுகிழமைகளில் வருஷப்பிறப்பு மாதப்பிறப்பு அமாவாசை முதலிய விசேஷங்கள் கூடியவழி அவைகளும் விரததினங்களாகமாறுகின்றன.

இப்படி நமக்கு விரததினங்களை ஏற்படுத்தி விரதமிருக்கும்படி நமக்குக்கற்பித்த பெரியோர்களின் அபிப்பிராயம் யாதோ? முற்றும் தெரியக்கூடாமற் போனாலும் நமக்கேற்பட்டுள்ள அறிவினாற் சிற்சில காரணங்களை யாகிலும் கண்டறியலாமென்று நினைக்கின்றேன்.

தேகத்தின் சேட்டைகளுக்கு உணவே காரணமாம்.

உணவு ஒடுங்கின் தேகத்தின் சேட்டைகளும் ஒடுங்கும். இதனை,

"மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந்தி டப்பறந்து போம்"

என்றமெய்மொழி மெய்யாக்கும். மெய்ப்பொருளைச் சிந்தித்தற்குத்தேகசேட்டையற்றிருத்தலே அவசியமுடைமைபற்றி பசித்திருக்கவேண்டுமென்பது. இனிமேற்கூறியபாட்டால் தவமுஞ் செல்லாது என்றால், மனவுறுதியும் அவாவின்மையும் வேண்டப்படுதலின் பசிநோய் உண்டாங்கால் அதனைத்தாங்கும் பொறையும் மனவுறுதியும் உணவின்மேல் அவாவின்மையும். வேண்டும் அஃதெப்படிக்கூடுமென்றால் உணவின்மேல் வைக்குங்கருத்தை உண்மைப்பொருளாகிய கடவுளின் மேல் வைத்தவழி அது கூடுமென்க.

இதுபற்றியே.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" என்று

தமிழ் வேதத்திற்கூறிய வாறுங்காண்க.

சிற்சில தினங்களில் உணவு நீத்து ஒடுங்கியிருந்து கடவுளைச்சிந்தித்தல் செய்தால் ஐம்புல ஆசையடக்கற்குங் கடவுளை யோகத்திருந்துசிந்தித்தற்கும் வன்மை தரும் பழக்கமாகும், இதுயோக நிலைபுகுவார்க்குஆரம்பமுமாகும், இதுபற்றியே இல்லறத்திருக்குங்காலேவிரதாதிகள் செய்யுமாறு பணித்திருக்கின்றனர் பெரியோர். இவ்வாறுசெய்துவரின்பின் இல்லநீத்து துறவறத்திருக்குங்கால் தேகம்துன்புறாது யோகநிலைக்குத் துணைசெய்யவும் வாதனைகளைப் பொறுத்துக்கொள்ளுதற்கும் ஏற்றதாகும் என்று கொண்டுகூறினர். இதனையறியார் இவ்விரதாதிகளை இழித்துக்கூறுவர். அவர்களின் அறியாமைக்கு என்செய்வோம்! சிலர்யுக்தியால் மாதத்திற்குஒருமுறை இருமுறை உணவின்றிப்பசித்திருத்தல். தேகத்திற்கு நல்லதென்றும்வயிற்றினுள்ளேயுள்ளமந்தம், அஜீரணம், நோய்முதலியன தன்வலிகுன்றிமாயும். அதனால் மாதத்திற்கு ஒருமுறை அல்லது இருமுறைஉணவு நீத்துப்பசித்திருத்தல் வயித்தியநூன்முறைப்படி நல்லதாகும் இதனாலேதான் பெரியோர்கள் விரதங்களைஏற்படுத்தினர். இதனானே தேகாரோக்கியமும், தெய்வசிந்தனையும் எய்தி உலகம் இன்புறுக துன்பினின்றும் விடுபெற்று ஞானமுற்று வீடுபெறுக வென்பதே அம்மேலோரின். அபிப்பிராயம் என்பர் இதுவும்கொள்ளத்தக்கதே.

இவ்விரதாதிகளைப்பற்றி இன்னும் பலபெரியோர்கள் பலவிதமாக்கப்பகர்கின்றனர். அதனைப்பின் சமயம்வாய்க்கும் பொழுதெல்லாமெழுதுவாம்.

அ. ம. நாராயணசாமிபிள்ளை.

## ஆன்ம இலக்கணம்.

இது ஆன்ம + இலக்கணம் என்னும் இருமொழிகள் சேர்ந்தவொரு தொடர்மொழி. இவற்றுள் முன்னைய ஆன்ம சப்தம் ஜீவான்மா, பரமான்மா இரண்டனையும் குறிக்கும் ஜீவான்மாவைக்குறிப்பது சித்தாந்தமும் பரமான்மாவைக்குறிப்பது வேதாந்தமுமாம். ஈண்டுசித்தாந்த வழக்கின்படி ஜீவான்மாவே பொருளாம். இனி பின்னைய இலக்கணம் என்னும் சொல் தன்மை என்பதைக்குறித்து நிற்கும். ஆகவே ஆன்மாவின் தன்மை என்பது சொற்பொருளாம். இன்னுருபு தொகை.

தனுகரண புவனபோகமென்னும் அறிவில்லாத சடப்பொருள்கள் நான்கனுள் தனுகரணங்களை யான் எனதென்றும் புவனபோகங்களை எனதென்றும் அபிமானித்து உடல் தோறும் நான் என்னும் சொல்லிற்குப் பொருளாய் அறிவுடையதாய் ஒருபொருள் உண்டென்று அனுமான அளவையால் அறியப்படும் இதுவே ஆன்மாவாகிய உயிராம். இப்பொருள் அறிவுடைய தாயினும் முன்சென்றதையும் பின்வருவதையும் நிகழ்காலத்து வந்த தொன்றை இதனால் வந்ததென்றும் அறிதல் கூடாமையால் அறிவித்தாலறியும் தன்மை உடையதெனப்பெறுதும். பெறவே அறிவிப்பான் ஒரு இறைவன் வேண்டப்படும் அவ்விறைவன் முற்றறிவுடையவனாய் உயிர்தோறும் அந்தரியாமியாய் இருந்தாலன்றி உயிர்களின் கன்மத்திற் கீடாக தனுகரணபுவனபோகங்களைக் கூட்டுவிக்கவும் உயிர்களறியவும் இயலாது. இதுபற்றியே.

"எண்பத்து நான்குநூ றாயிரமா மியோனிதோறும்
கண்பொ திந்தசீவர் கருத்துள்ளே—பண்பொதிந்த
தேவியோடு மீசன் செறிந் திரானேயாயி
னாவி யொன்றையுற் றறியாதாம்" என்றார் பெரியாரும்

அங்ஙனமாயினும் தனுகரண புவனபோகங்களின் கட்டுப்பட்டால் அந்தரியாமியாகிய இறைவனை உயிர்கள் அறியாதுவருந்தும். அக்கட்டு நீங்குங்கால் அறிந்தின்புறும். ஆகவே இறைவன், உயிர், கட்டு அல்லது பாசம் என்னும் மூன்றுபொருள்கள் உண்டென்பது அனுமான அள

வையாலும் காக்ஷி அளவையாலும் ஆஸ்திக சமயம் யாவும்ஒப்புக்கொள்ளும். ஒப்புக்கொள்ளினும் இறைவனுக்குரிய முழு இலக்கணமும் அமையப்பெறுதாளே இறைவனென்றும் உயிருக்குரிமையில்லாத இலக்கணத்தை உயிருக்குண்டென்றும் பாசத்தினிலக்கணங்களை முறைபிறழவும் கூறும்சமயங்கள் பல. அவ்வாறன்றிமுப்பொருள்களின் இலக்கணங்களை உள்ளவாறு கூறுவது சைவசமயமேயாம். இம்முப்பொருள்களுக்கும் சொரூபஇலக்கணம் எனப்படும். சிறப்பியல்பும் தடத்த இலக்கணம் எனப்படும். பொதுவியல்புமென இரண்டு இயல்புகள் தனித்தனி உண்டென்று சைவசமயம் கூறும்.

சிறப்பியல் பாவதுநிலைபெயருடைய இயற்கைத்தன்மை. பொதுவியல்பாவது தோன்றி யொடுங்கும் செயற்கைத்தன்மை. இலக்கணநூல்கள் ஒருபொருளுக்கே உரியதன்மை சிறப்பென்றும் பலபொருளுக்குரிய தன்மைபொதுவென்றுங் கூறும். மேற்கூறியவாறு ஒருபொருள் ஒருதன்மையாகவும் இருதன்மையாகவும் இருக்கும். வேறுபாட்டினால் சிறப்பியல் பென்றும் பொதுவியல் பென்றும் கூறும் சித்தாந்தசாஸ்திர வழக்கிற்கும், இலக்கணநூல் வழக்கிற்கும் வேற்றுமை உண்டென்றறியவேண்டும். இவ்வாறு இரண்டிலக்கணங்களையுடைய இறைவன், உயிர், பாசம்என்னும்முப்பொருள்களுள் நடுநின்றஉயிர்ப்பொருளாகிய ஆன்ம இலக்கணத்தைப்பற்றி ஈண்டு விசாரிப்பாம்.

ஆன்மா அளவில்லாதன. அறிவு, இச்சை, செயல்என்னும் மூன்று சக்திகளையுடைய சித்துப்பொருள். ஆயினும் சுதந்தரமாய்ஒன்றையுமறியாது. எதுபோலெனில்கண்ணுக்கொளியிருந்தும் சூரியன், சந்திரன், அக்கினியின் பிரகாசங்களின் உதவியின்றி பொருள்களைத்தெரியமாட்டாதுபோல என்க. அம்மூன்றுள் ஒன்றின் உதவியைக்கொண்டு ஒளியுடைய கண் பொருள்களைத்தெரிவது போல அறிவுடைய ஆன்மாவும் பரமான்மாவாகிய சிவபெருமானால் அறிவிக்க அறியும். கண்ணொளி தொழிற்படுதற்கு மாத்திரமேயன்றிப் பொருள்விளங்குவதற்கும் சூரியாதிப்பிரகாசம் வேண்டப்படுவதுபோல ஆன்மா அறிதலைச்செயதற்கு மட்டுமேயன்றி பொருள் களறியப்படுதற்கும் அவற்றினு மிறைவன் வியாபத்திருக்கவேண்டும். இவ்வாறு உயிரினும் விடயத்திலும் வியாபத்திருத்தலோடு உயிரொன்றனை யறிவதற்குத் தானுடனிருந்தறியவும் வேண்டும். அறிவித்தலைச்செய்வது காட்டுமுபகாரமென்றும் அறிதலைச்செய்வது காணுமுபகாரமென்றும்கூறப்படும்,

யளிங்கு அடுத்ததன்வண்ணமாய் விளங்குமாறு போலவும் கண்ணொளியானது ஒளியோடுகூடி ஒளியாயும் இருளோடு கூடி இருளாயும் விளங்குவதுபோலவும் ஆன்மாவும் பாசத்தோடு கூடிப் பாசமாயும் பதியோடு கூடிப் பதியாயும் இவ்வாறு சார்ந்ததன் வண்ணமாய் வியாபித்து நிற்கும் சதசத்தாந்தன்மையுடையது பாசத்தோடு கூடி நிற்குங்கால் பசுவெனவும் பதியோடு கூடி நிற்குங்கால் ஆன்மா வெனவும் பெயர் பெறும். பதியும் பசுவும் வியாபகமாயிருக்கக்கூடுதலும கூடாமையு மெவ்வாறு பொருந்து மெனின் ஈண்டுகூடுதல், கூடாமை என்பதற்கு உட்பட்டும்முற்பட்டும் இருத்தல் என்றுபொருள் கொள்ளவேண்டும். அதாவது பாசத்தோடு நிற்குங்கால் பதி உட்பட்டும் பதியோடு நிற்குங்கால் முற்பட்டும் விளங்கும். பதியோடுகூடி அதனுளடங்கி நிற்குந்தன்மையே சொரூப இலக்கணமாகிய சிறப்பியல்பு. பாசத்தோடு கூடிப் பதியை உட்படுத்திநிற்குந் தன்மதடத்த இலக்கணமாகிய பொதுவியல்பாம். சொரூப இலக்கணம்இயற்கையும்தடத்தலக்கணம் செயற்கையுமாம்.

சொரூப இலக்கணத்தையுடைய ஆன்மாவிற்குச் செயற்கையான பாசம் நெல்லுக்கு உமியும் செம்பிற்குக்களிம்பும்போல் அநாதியே பொருந்தியிருக்கும். இப்பாசம் ஆணவம், கன்மம், மாயை என்மூன்றிறப்படும் அவற்றுள் ஆணவமலம் ஒன்றேயுடைய ஆன்மா விஞ்ஞான கலர் என்றும் ஆணவம், கன்மம், இரண்டு முடைய ஆன்மாபிரளயாகலரென்றும், ஆணவம், கன்மம், மாயைமூன்றுமுடைய ஆன்மா சகலர் என்றும் பெயர் பெறும், கலா என்பது பாசத்தைக்குறிக்கும் சகலர் என்றபோது எல்லாப்பாசமும் என்ற பொருள் கிடைக்கும். ஆதலால் மும்மலமுடையார் சகலர் என்றாயிற்று. பிரகிருதிமாயாகாரியங்கள் பிரளயமாய் ஒடுங்கி அசுத்தமாயா புவனத்தில்போகம் புசித்துக்கொண்டிருக்கையில். பிரகிருதிமாயை பிரளயுமாயும் போக்கம் புசித்தற்குறிய கன்மமலம், ஆணவமலம் இருததலால் இவ்விருமலமுடையாருக்கு பிரளயாகலர் எனப்பெயராயிற்று. அசுத்தமாயா புவனபோகங்களும் நீங்கி சுத்தமாயாபுவனத்தில் சுகதுக்காதிக்கேதுவான விருப்பு, வெறுப்பின்றி ஞானபரனும் தான் ஒரு முதலென நிற்கும் போது ஞானம் உதயமாயும் தான் முதலன்றென நில்லாமையால்ஒரு மலமுடைய விஞ்ஞானகலரெனப்பெயராயிற்று.

இன்னும் சகலரில் இம்மூவகையும் உண்டென்று கூறுதலும் ஒன்று. அதாவது ஆன்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம் என்னும் முப்பத்தாறு தத்துவங்களோடு கூடிநிற்கும்போது மும்மலமுடைய சகலரென்றும், போக்கியகாண்டமாகிய ஆன்மதத்துவம்நீங்க போககாண்டமாகிய வித்தியாதத்துவமும் பிரேரககாண்டமாகிய சிவதத்துவமும் பொருந்தியிருக்குங்கால் இருமலமுடைய பிரளயாகலரென்றும் வித்தியாதத்துவமும் நீங்க சிவதத்துவத்தோடு பொருந்தி நிற்குங்கால் ஒருமலமுடைய விஞ்ஞானகலரென்றும் கொள்ளப்படும்.

இவ்வான்மா பாசத்தைப் பற்றுதலாலும் விடுதலாலும் கேவலம் சகலம், சுத்தமென மூன்றவத்தையினைப் பொருந்தும். அவை வருமாறு:—ஆணவமலம் ஒன்றேபற்றி அறிவு, இச்சை, செயல்கள் தொழிற்படாமல் இருட்டறையில் குருட்டுச் சிசுப்போல வருந்துவது கேவலாவத்தை. இதனை

"சனுதக் குருட்டுச் சந்ததி யிருட்டறை
வாய்ப்பட் டாங்கு மலவாய்ப் பட்டுப்
பன்னா ளழுங்கி பருவா லுழக்கு
மனுதி கேவலத் தாருயி ரம்ம"

என்னும் ஆன்றோர் வாக்கியத்தாலுணர்க. ஒருமலத்தால்அறிவு, இச்சை, தொழில்கள் நிகழப்பெறாது அவத்தைப் படுதலின் கேவலாவத்தை யெனப் பெயராயிற்று.

இவ்வாறு மலத்தால் பிணிப்புண்டு வருந்தும் ஆன்மாவிற்கு சிவபெருமான் இரங்கி குருடனுக்குக் கோல்கொடுப்பதுபோல மாயையினின்று சரீரத்தைக் கொடுத்து இதாகிதமாகிய கன்மத்தையுங் கூட்டுவித்தபோது சகலாவத்தை எனப் பெயர்பெறும். மும்மலத்தாலும் அவத்தைப்படுதலின் சகலாவத்தை எனப் பெயராயிற்று.

மும்மல வாதனையும் நீங்கும்படியான சாதனங்களில் உரைத்து நின்று சாதிக்குங் காலத்தும் பயனடைந் தின்புறுங்காலத்தும் சுத்தாவத்தை எனப்பெயர்பெறும். மலமாகிய அழுக்கு நீங்கப்பெறுதலால் சுத்தாவத்தை எனப் பெயராயிற்று.

இம்மூன்றவத்தையுள் கேவலாவத்தை பொதுவியல்பிற் பொதுவாம்.

(இன்னும்வரும்) போ. முத்தையபிள்ளை, சைவப்பிரசாரகர், தூத்துக்குடி.

## ஆசாத்திரயம்.

(346-ம் பக்கத் தொடர்ச்சி.)

"ஆசைச்சுழற்கடலி லாழாமலே யாநின்
நேசப் புணைத்தாளிருத்தி லாகாதோ"
"ஆசை நிகளத்தினை நிர்த்தூளிபடவுதறி
யாங்காரமுனையை யெற்றி ............"
"மின்னனைய பொய்யுடலை மெய்யென்று மையிலகு
விழிகொண்டு மையல் பூட்டும்
மின்னார் களின்பமே மெய்யென்று வளர்மாட
மேல் வீடு சொர்க்க மென்றும்,
பொன்னைப் பழியாது வளர்பொருளென்று போற்றியிப்
பொய்வேட மிகுதிகாட்டிப்
பொறை, யறிவு, துற, வீத, லாதி நற்குணமெலாம்
போக்கிலே போகவிட்டு.........."

என்பது முதலான திருப்பாடல்களை யருளியிருப்ப தன்றி நம் திருவெண்காடர் அல்லது பட்டினத்தடிகளும்.—

"எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப்பட்டாலும்
முத்தர் மனமிருக்கு மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளையாடியிரு கைவீசிவந்தாலுந்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்."

என்று கூறியுள்ளபடி எக்காலத்தும் மனதை ஆசையால் அலைய விடாது கட்டுப்படுத்தி வீடின்மேலான கதியையடையலாம். மறுபிறவிக்குக் காரணமாகிய இவ்வாசைகளை அகற்றுவது முதன்மையானது.

இது பற்றியன்றோ ஸ்ரீக்ருஷ்ணபகவான் அர்ஜுனனைப்பார்த்துப்பின்வருமாறு உபதேசித்தார்.

"அநாஸ்ரித: கர்மபலம் கார்யம் கர்ம கரோதிய:
ஸஸந்யாஸீ சயோகீச ... ... ..."

(பொருள்) பயனையெதிர்பாராது நிராசையாயுழைப்பவர்எவரோ அவரே துறவி அவரே யோகி (கீதை = அத்-1-சு) தவிரவும் ஸ்ரீக்ருஷ்ணபகவான்:—

"அஸம்ஸக்த புத்தி: ஸர்வத்ர ஜிதாத்மா விகதஸ்ப்ருஹ:
நைஷ்கர்ம்ய ஸித்திம் பரமாம் ஸந்யாஸேநாதிகச்சதி॥"

[illegible]
[illegible] ௨
[illegible]
[illegible] ௩

ஓபாதவம் சத்துதித்தவனே!

(பொருள்) அச்சமின்மை, மாசற்றமனம், ஆத்மஞ்ஞானமார்க்கத்தையறிந்து அந்நிலையில் நிற்றல், ஈதல், பொறிகளையடக்குதல், வேட்டல், ஓதல், நோற்றல், நேர்மை, (ஒருஜீவனையும்) துன்புறுத்தாமை, பொய்புகலாமை, சினமகற்றல், தன்னைமறத்தல், மனமடங்கல், புறங்கூறாமை, எல்லாஜீவராசிகளிடத்தும் செந்தண்மை பூண்டொழுகுதல், ஆசையற்றிருத்தல், இரக்கமுடைமை, சபலமின்மை, பெருந்தன்மை, பொறுமை, துணிவு, சுத்தி, இன்னாசெய்யாமை, இருமாப்பின்மை, இவையனைத்தும் தெய்வஸம்பத்துடன் பிறந்தவனுடைய குணங்கள்.

கீதை—அத்-1-2-3.சு

என்று கூறியுள்ளார்.

தவிறவும் அர்ஜுனன் ஸ்ரீக்ருஷ்பகவானைப்பார்த்து

"[illegible]
[illegible] ௩௪

(பொருள்) க்ருஷ்ண!

மனம்நிலையற்றது, (ஸ்திரமில்லாதது) பொறிகளைக்கலக்குகிறது; அடங்காதது; விஷயங்களில்மிகுந்தபற்றுதலுடைய்து; ஆதலால் மனத்தை யடக்குதல்,—காற்றைப்பிடித்துக்காகத்தில்அடைப்பதுபோல் மிகவும் அறிதென்று யானெண்ணுகிறேன். (கீதை-5-அத்-34-சு.)

என்ற அர்ஜுனனைப்பார்த்து பகவான்.—

(பொருள்) குந்திமைந்தனே!

மனதையடக்குவது மிகவும் அறிதென்பதற்கும், மனம் (விஞடிக்குவிஞடி) மாறுந்தன்மையது என்பதற்கும் ஐயமின்று, எனினும் பழக்கத்தினாலும் (விஷயங்களில்) பற்றின்மையினாலும், அடக்கப்படுகிறது. (கீதை—அத்-35-சு) எனஉபதேசித்திருப்பதையுங்காண்க.

மேலும் தாண்டவமூர்த்திஸ்வாமிகள் தாமியற்றிய கைவல்யநவநீதத்தின் முதற்படலமாகிய தத்துவவிளக்கத்தின் ஈற்றில் பிரமத்தில் கற்பிதமாகத் தோன்றும் இச்சகத்து அனைத்தும் மித்தையேயாம்.

சுத்த சைதன்யம் ஒன்றே ஸத்யம் (உண்மை.) என்பதைப் பின்வருமாறு திருவாய்மலர்ந்துள்ளார்.—

"கானநீர்க் கிளிஞ்சில் வெள்ளி கந்தர்ப்ப நகர்க்கனூர்
வானமை கயிற்றிற்பாம்பு மலடிசேய் முயலின் கோடு
பீனமாந்தரிபு மானிப்பிரபஞ்சமெல்லாம் பொய்யே
ஞானமெய்ம்மகனேயுன்னை நம்மானைமறந்திடாதே."

ஆசையை நீக்குவதால் ஆநந்தம் லபிக்கும் பொன்னாசை பூமியாசைகளைவிட உடலாசை மிகவுங்கொடிது என்பதைப் பட்டினத்தடிகள் தமது திருவாக்கால் உடலைப்பற்றி:—

"......................கருதினையிதனுள், பீளையு நீறும் புறப்படுமோருபொறி, மீளுங்குறும்பி வெளிப்படுமொருபொறி, சளியு நீறுந் தவழுமொருபொறி, உமிழ்நீர்க்கோழையொழுகு மொருபொறி,வளியுமலமும் வழங்குமொரு வழி, சலமுஞ்சீயுஞ்சறியுமொருவழி, உள்ளூறத்தொடங்கி வெளிப்பட நாறும்,................ஆசைக்கயிற்றில் ஆடும்பம்பரம், ஐயா நோய்க்கிடையோடு மரக்கலம்,............கனவினிற்கண்ட கண்காக்ஷி; என்பது முதல் கூறியுள்ளவைகளெல்லாம் இங்கெடுத்தெழுத விரிவஞ்சி விடுக்க நேர்ந்தது. ஆதலினனைவரும்பிராசையைக்கடைபிடித்தொழுகுவார்களாக.

ஆசைகளகன்றெல்லோரும் ஆநந்தமடைந்து வாழ்க: சுபம்!

**கங்கா ஜடேச சர்மா.**

## சிறுவர்பக்கம்.

### கடவுளின் கருணை.

கடவுளின் மகிமையைத்தேரும் ஆற்றலில்லா அசடன் ஒருவன் ஒருநாள், தனக்கு உறவினனாகிய ஒருவனைக்காணுமாறு நெடுந்தூரத்துள்ள ஒருகிராமத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தான்.

நடந்து செல்லும்வழியில் ஆங்கொருபக்கம் படர்ந்து பாவியிருக்கும் பரங்கிக்கொடியைக் கண்டு அதை உற்றுக்கவனித்தான். அதன் கொடிகள் சிறியதாகவும் காய்கள் மிகப்பருமனாகவும் படிமிசைப் (= பூமி) படிந்திருப்பதைக்கண்டுகடவுளை எல்லோரும்போற்றிவுடையவன் என்கின்றார்களே இது எவ்வளவு அறியாமை! கடவுளுக்கு எவ்வளவு அறிவுகுறைந்திருக்கிறது! இவ்வளவு நுண்ணியகொடியில் எவ்வளவு பருமனாகிய காயைப்படைத்திருக்கிறான்! உலகம் பேதமை

லுடைத்து என்று நினைத்துக்கொண்டே பின்னும் தன்வழியை நோக்கிச்சிறிது தூரம் நடந்தான்.

காலையிலிருந்து நெடுந்தூரம் நடந்த அலுப்பினாலும் சூரியன் தனது உக்கிரமான கிரகங்களை விரித்துக்காய்வதனாலும்வருந்தித்தாக முற்றுக்களைப்புடன் நடந்துக்கொண்டிருந்தான். இவ்வாறு சோர்ந்து நடைமெலிந்துசெல்வான்வழியில் * அண்ணல் யானை அணிதேர்புரவி ஆட்பெரும்படையொடு, மன்னர்க்கிருக்க! நிழலைத்தரும் தன்மையதாகிய ஒருபெரிய ஆலமரத்தைக்கண்டு அடங்காமகிழ் கொண்டு புதையலைக்கண்டமிடிஞன்போல (மிடிஞன் = தரித்திரன்) மிக்கஆர்வத்தோடு அவ்வாலமரத்தின் அடியிற்போய் நிழலில் நின்றான்; அப்பொழுது குளிர்ந்த இளங்காற்றும் அவன் மேற்றைவந்தது (தைவருதல் = தடவுதல்.)

அவனுஞ்சிறிது களைப்பாறினன். மிகத்தவித்து வந்தவனாதலால் சமீபத்திலுள்ள ஓர்நீர் நிலையிற் சென்று தண்ணீர் அருந்தி தாகந்தீர்ந்து மறுபடியும் அவ்வாலமரத்தடியில் வந்து படுத்துக்கொண்டு தனது ஆயாசத்தை நீக்கநினைந்து மரத்தடியிற்றனது துண்டை விரித்துப் படுத்து மரத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தான் அப்பொழுது ஆலமரத்தில் ஆலம்பழங்கள் செவப்பாகக்காணப்பட்டது.

மூழுமகன் (=மூடன்) அதிசயப்புக்கொண்டு ஆகா! என்னவிந்தைகடவுளென்ன இவ்வளவுமூடத்தனமுடையவனு! இவ்வளவுமூடத்தனமுள்ள கடவுளையா எல்லோரும் பேரறிவுடையவன் என்கின்றார்

---

வெற்றிவேற்கை

* "தெள்ளிய வாலின் சிறுபழத்தொருவிதை
தெண்ணீர்க்கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதேயாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலாகும்மே."

(இதன் பொருள்) தெளிவாகிய ஆலமரத்தின் சிறுபழத்திலிருக்கின்ற ஒருவிதையானது தெளிவாகிய நீரையுடைய குளத்திலுள்ள சிறுமீனின்முட்டையைப்பார்க்கிலும் மிகச்சிறியதாயிருந்தாலும் அது முளைத்து மரமாங்காலத்து பெருமையையுடைய யானையும் அழகிய தேரும் குதிரையும் ஆளும் ஆகிய நால்வகைப்படையோடும் ஒரு அரசன் இருப்பதற்கும் நிழலைத்தரும்படிப் பரவிவளரும் என்பதாம்.

கள்! இந்தப்புத்தியீனத்திற்கென்ன சொல்வது! சிறுத்த கொடியை உடைய அந்தப் பரங்கிச்செடியில் பருத்தகாயைப்படைத்த கடவுள் இந்தப்பெருத்த மரத்தில் எத்தனை சிறியதாகிய காயைப்படைத்திருக்கிறான். பெரியமரத்திற் பெரியகாயையும் சிறுத்தகொடியிற் சிறியகாயையும் படைக்கவேண்டுமென்னும்அறிவுகூட அந்தக்கடவுளுக்குத் தோன்றாது போயிற்றே இது என்ன பரிதாபம் என்று நினைத்துக் கொண்டிருந்தான்.

அந்தச்சமயத்தில் சிறிது காற்றுவீசியதால் ஒரு சிறு ஆலம்பழம் மரத்தினின்றும் விடுபட்டு விழுந்தது. அது கீழேபடுத்திருந்த பிராணியின் மூக்கிற்பட்டது.

அப்பழம் விழுந்த அதிர்ச்சியால் இவனுக்கு மிக்கவலியுண்டாகி பிராணவேதனையுற்றுத்தெளிந்து அந்தோபாவியானேனே! பேரறிவுடைய கடவுளை வீணே நிந்தித்தேன்! என்னிலும் கீழான அறிவுடையவரும் உண்டா! கடவுளின் மகிமையை அறிந்தபெரியோர்களையும் அவர்வாக்கையும் நிந்தித்தஎனக்கு நரகவேதனையன்றோசம்பவிக்கும்! கடவுளின் அற்புதச்செயலை மதிப்பதற்கு, மதியிலாயானோதரம்! வேதங்களாலும் அறியப்படாத அவன் மகிமை அவர்படைப்பிற் கடைப்பட்டவனாகிய நானோ அறியவல்லன்! நன்று நன்று என்று தன்னைநிந்தித்துக்கொண்டான்.

பரங்கிக்கொடி பூமியிற் படர்ந்திருப்பதால் பருத்தகாயையும், ஆலமரம்நறுநிழல்தந்து வழிப்போக்கர்களுக்கு உதவிசெய்வதால்அதன் அடியில் வந்து தங்குவோர் கஷ்டப்படாதிருக்கச் சிறுகாயையும் படைத்தார்.

இச்சிறு ஆலம்பழம் விழுந்தே இவ்வளவு வேதனை தருமாயின் இம்மரத்திற்குத் தக்கதாகப் பெருங்காய்பழம் இருந்திருப்பின் அப்பெரிய காய் விழுந்திருந்தால் நான் நசுங்குண்டு அழிந்திருக்க மாட்டேனோ? என் விவேகக் குறைவினாலே கடவுளைக்குறைவாய் எண்ணினேன். என்று மனம் வருந்திக்கொண்டு தன்வழி நோக்கிநடந்தான். அதுமுதல் கடவுளை நிந்திப்பதினின்றும் நீங்கி கடவுளைச் சிந்தித்து வந்திப்பதே தனக்கு விரதமாகக்கொண்டொழுகினான்.

## தப்பிக்கொள்ளத்தந்திரங்கண்ட கள்வன்.

ஒரு கிராமத்தில் ஒரு குடியானவன் வீட்டில் சாம்பற் பூசனிக் (= பூசனை) கொடி ஒன்று முளைத்து தளிர்த்துவளர்ந்து கூறையின்

மேற்படர்ந்து மிகுதியாகக் காய்த்திருந்தது. அதனைக்கண்ட ஒருகள்வன் அதிற் சிலகாய்களைக் களவு செய்ய நினைத்துச்சமயம்பார்த்துக் கொண்டிருந்தான்.

அம்மாவாசிகை சமீபித்த ஒருநாள் மிக்க இருட்டாயிருந்தபொழுது நடுநிசியில் அக்கள்வன் அக்குடியானவன் குடிசையின் கூறை மேலேறிக்காய்களைக்களவுசெய்ய நினைத்து அவன் குடிசையின்கூறை மேலேறினன் அதுகாலங்கண்ட பழங்கூறை அதற்குமேல்முன்னமே சாம்பற் பூசினிக்காயின் பாரம் அதோடு இக்கள்வனும் ஏறின உடனே அப்பழங்கூறை பொத்துக்கொள்ள கள்வன்குடிசைக்குள் வீழ்ந்தான்.

அக்குடிசைக்குள் குடியானவனும் அவன்மனைவியும் படுத்திருந்தவர்கள் இவன் விழுந்த சப்தங்கேட்டுத் திடீரெனவிழுந்து விளக்கை ஏற்றிக்கவனிக்கத் தொடங்கினர். கள்வன் இன்று இக்குடியானவன் கையிற் சிக்கிக்கொண்டோம். இனித்தப்புவதருமை என்றாலும் நம் மாற் கூடியதந்திரஞ்செய்வோமென்று நினைத்து விழுந்த இடத்திலே எழாமல் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

சாம்பற்பூசினிக்காயின்மேல் இவன் தேகம் படிந்திருந்ததனல் இவன்தேகமெல்லாம் சாம்பலாகவிருந்தது. அச்சாம்பலே இவன் தப்புவதற்கு ஏற்ற தந்தரமாக இருந்தது.

"தந்திரமாவது நீறு" என்னும் <u>மணிவாசகர்</u> திருவாய்மொழி இக்கள்வனுக்கு மோட்சத்தையடைதற்குத் தந்திரமாகாது தப்பிக் கொள்வதற்குத் தந்திரமாகவிருந்தது.

குடியானவனும் அவன்மனைவியும் தங்கள் குடிசையில், ஒருவர் மேலெல்லாஞ் சாம்பலோடு கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்திருப்பதைக்கண்டார்கள் பிரமித்து நின்றார்கள்.

இவர் யாரோ என்று நினைத்துக்கொண்டிருக்கையில். சிறிதுநேரத்திற்குப் பிறகு அக்கள்வன் கண்ணைத் திறந்து பத்தா! இதுதான் பூலோகமா? என்றான்.

அவர்கள் இவர்யாரோ தெய்வலோகவாசிபோலிருக்கிறது, தவறி பூமிக்குவந்துவிட்டார் போலிருக்கிறதென்று நினைத்து அவர்கள் அக்கள்வன் காலில்விழுந்து வணங்கினார்கள். கள்வன் நமதுகாரியம்பலித்ததென்று நினைத்துக் கொண்டு அவர்களை நோக்கி நான் தெய்வலோகத்திலிருந்துவந்தேன் பூலோகத்தைப்பார்க்கவேண்டுமென்பது

நான் எண்ணம் நீ பக்தனுதலினால் உன் வீட்டிலிறங்கினேன் என்று அவன் அதுவரை சம்பாதித்து வைத்திருந்த பொருள்களை யெல்லாம் கொடுக்கும்படிக்கேட்டு வாங்கிக்கொண்டு சாம்பற் பூசினிக்காயினும் தனக்குவேண்டிய மட்டும் பறித்துக்கொடுக்கச்சொல்லி அதையும் மூட்டைகட்டித் தோளில் போட்டுக்கொண்டு நடந்திட்டான்.

உலகில் இக்கள்வனைப்போல் சாம்பார் வேடமும்மடாதிபதிகள் வேடமும் பூண்டு கொள்ளையடிப்பவரும் வியபிசாரம் செய்வோரும் பெருத்து விட்டனர்.

அக்குடியானவனைப்போல தம்பொருளையும் தம்பெண்டையும் இக்கள்வருக்குக்கொடுக்கும்குருட்டுமுண்டங்களும் இல்லாமற்போக வில்லை. இனியேனும் கண்விழிப்பாயிருக்க வேண்டும்.

கழுதை புலித்தோலைப் போர்த்து புலத்தை மேய்ந்தது போல சுவாமிகள் மடாதிபதிகள் என்னும் வேடம் பூண்டு இக்கொடும்பாதகக்கள்வர்கள் செய்யும் அநியாயத்திற்கு அளவேயில்லை. இவர்கள்வேடத்திற்குத்திருநீறும் உருத்திராக்கமும்உதவிசெய்வது தான்வியப்பு.

இக்கொலைபாதகர்கள் பொதுச் சொத்தைக் கொள்ளையிட்டுப் பொதுமகளுக்கே தருகின்றனர்.

தமிழுக்கேனும் சைவத்தின் பொருட்டேனும் உபயோகின்றனரா? இவர்கள் கூடாவொழுக்கம் பிறருக்குப்புலனாகியும் இவர் வெட்கமின்றித் தங்களைப் பெருமிதமாக நினைப்பதுதான் விந்தை!

உண்மையுரைப்போன்.

## தமிழ்மறை அனாதித்துவம்.

(356-ம் பக்கத்தொடர்ச்சி)

இந்தஉண்மையினால் சிவத்தைப் பூசித்துப்பின்சிவத்தால் வரம் பெற்றுத் திருமறைக்காட்டுப் பொற்கதவமடைத்து விட்டுப்போனது தமிழ்மறையேயாக இருக்க வேண்டும். பின்வந்த ஆரியர்களால் ஏற்பட்ட தற்கால இருக்காதி நால்வேதமாயிருந்தால் அவ்வாரிய வேதாங்கக்கருத்து தற்கால ஆரியரிற்பலர் கூறுகிறபடிக்கு (ஏகாத்மவாதமாகிய) மாயாவாதத்தைக்குறிக்காமல் சிவபிரானை நினைந்து சிவமஹாநெறியாகிய சைவநெறியைக்கூடும் அந்த "அனாதிகலையாகம்" பற்றிய சைவசித்தாந்தத்தையே குறித்துக்காட்டும்.

அத்தமிழ் வேதம் (திருமந்திரம்) கூறுகின்றது:—

"திருநெறியாவது சித்த சித்தன்றிப்
பெருநெறியாய பிரானை நினைந்து
குருநெறியாஞ் சிவமாநெறிகூடும்
ஒருநெறியொன்றாக வேதாந்த மோதுமே."

இந்தமெய்ஞ்ஞானக்கருத்து பற்றயன்றோ என்னுடை ஸ்ரீதாயுமானசுவாமிகள்:—

"சித்தாந்தத்தே சீவன் முத்தி சித்தித்தலால்
சித்தாந்தத்தே நிற்போர் முத்திசித்தித்தவர்
சித்தாந்தம் வேதாந்தம் செம்பொருளாதலால்
சித்தாந்தம் வேதாந்தங் காட்டாட்டுஞ் சிவனையே."

என்ற அத்தமிழ் மறைக்கிணங்க,

"வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னார்கண்களிக்கு
நாதாந்த மோனநலமே பராபரமே." என்று போற்றினார்கள்.

ஆகவே இந்த "வேதாந்தமும்" "சித்தாந்தமும்" தமிழ் என்றே நிரூபிக்கப்பட்டதுகண்டீர் நிதானித்து நற்சிந்தையோடுசிந்திப்பீராக. சித்தந்தெளியத்தான் 'சத்து' புலப்படும். சடவாத சன்னிக்குணங்களான அடவாதம், பிடிவாதம், மடவாதம், வீண்வாதம், துர்வாதம், எதிர்வாதம், இவற்றைக்கடந்து தெளியாத தவக்குறைவாளர்க்குத் 'தமிழ் மறையனுதித்துவம்' விளங்காதுகண்டீர்.

18-(1) இன்னும் நம்மவர்களிற் பலரைப்பற்றி மயக்கும் ஆசங்கையொன்றுண்டு. தமிழ்மறையில் சிலவடமொழிகள் உண்டென்றும் கூறிமயங்குகின்றார்கள். சிவநாமங்களும் சைவசித்தாந்த பரிபாஷைமொழிகளும் தமிழிலேயே யிருந்தனவாகவும் அவைகளை ஆரியத்திலும்பிரயோகித்துவந்திருப்பதாகவுந்தெரியவருகிறது. 'சிவ', 'நந்தி', 'இலிங்கம்', 'அரன்', 'உமை', 'தொண்டு', 'அன்பு', 'அருள்', இவை போன்ற பதங்களும், ஆயிரஞ்சிவ நாமங்களும் 'தமிழ்மறைப்பதங்களாகவே வழங்கி வந்திருக்கின்றன. பிரணவம் (அ+உ+ம்)=ஓம் தமிழ்மறை மொழியேதான். 'தமிழ்மறை' பறைகின்றது:—

"நாம மோராயிரம் ஓதுமின் நாதனை
யேம மோராயிரத்துள்ளே யிசைவீர்கள்
ஓமமோராயிர மோதவல்லார்கட்குக்
காமமோராயிரங் கண்டொழிந்தார்களே."

மேலேபதினெருவது பிரிவிற் கூறிய 51 மாதிருகையின் பீஜமந்திரமாகிய 51-அட்சரம் 'தமிழ்' மறையிலுள்ளவையேதான். ('தமிழ்' மறைநாலாந் 'தந்திரம்' பார்க்க)

(2)-இத்தேசத்திற்கு ஆரியர் குடியேறுவதற்கு முன் இங்கு 'தமிழ்மறை', சிவாலயங்கள், **சைவகுருக்கள்** இருந்தார்கள் என்பதற்கு இப்போதிருக்கும் பூர்வீகஆலயங்களே சாட்சியம். அப்போதிருந்த 'நால் வேதாகமங்களைத்தான்' நஞ்சமயாசாரியர் கூறுவது. அவை இப்போதைய இருக்காதி நால் வேதத்திற்காணும் முனிபுங்கவர்கள் கூறியன அன்று! அன்று! (இன்னும்வரும்.)

**ஹர. ஷண்முகமுதலியார்.**
**சைவசித்தாந்தீ, சேலம்.**

## அதிரசக்கூற்று

1. 90-வயதுடைய கிழவன் 80-வயதுடைய தன் பெண்சாதியை 'அடீ கிழவி' என்று கூப்பிட்டதற்கு அவள் அன்று முழுதும் சாப்பிடாமலிருந்தாளாம். பிறகு அக்கிழவி "அடிகுயரி" என்றதும்மகாசந்தோஷமாய்ப் போய்ச்சாப்பிட்டாளாம்.

2. சிவநாமத்தைக் கேட்டால் கோபங்கொள்ளும்ஒரு விஷ்ணுசன்னியாசி இருந்தார். அவரைத்தேடி வேறு யாரேனும் வந்தால்விஷ்ணுநாமமுடையவர்களாயிருந்தால்தான்அவர்களோடும்பசுவார். நாலைந்து அண்ணுத்தை பிள்ளைகள் சேர்ந்து அவரை அவமதிக்க வேண்டுமென்று எண்ணிக்கொண்டு ஒவ்வொருவனுக அவரிடம் போனார்கள். முதலிற்போனவனை உன்பெயர்என்னவென்று கேட்டார். அவன், விசுவலிங்கம் என்று சொன்னன். விசுவலிங்கம் விடியாமற்போக என்று வைது இங்கே நில்லாதுபோவென்று துரத்தினர். இரண்டாவது வந்தவன் தன்னை நடராஜா என்றான். அவனையும் வாயில் வந்தபடி வைது துரத்தினார். கடைசியாகவந்தவனை உன்பெயர் என்னவென்று கேட்டார். அவன் தன்னை ஹரிஹரகிருஷ்ணன் என்றான். சந்நியாசி சற்று நிதானித்துதலையை அசைத்து, பேஷ்! பேஷ்! அப்பா, நல்லா, நெருங்கப்பா, நல்லா, நெருக்கில்அகப்பட்டானு, இடுக்கில், அகப்பட்டானு செத்தானு தொலைந்தானு, பேஷ் பேஷ் நன்றாய் நெருங்கப்பா என்று குதூகலத்துடன் பேசினன் ஹரி ஹரகிருஷ்ணன் என்றதில், முதலிலும், கடையிலும், விஷ்ணுவும் நடுவில் சிவனும் இருப்பதால் அவ்வி

ருவரும் நெருக்க சிவன் தொலைந்தாரென்பது விஷ்ணு சந்நியாசியின் கருத்து. அப்பா! என்ன வைராக்கியமிது?

P. C. P.

## ஆரியர்கள் பால் ஓர் வேண்டுகோள்.—

**ஆரியர்காள்! சற்றுச் செவிகொடுத்துக் கேளுங்கள்.**

யான் சென்ற ஏப்ரல்-மீ த்திய இப்பத்திரிகையின் 300-ம்பக்கத்தில் "விதவைகளின்விஞ்ஞாபனம்" என்னும் விஷயத்தின்கீழ் கையொப்பமிட்டிருக்கும் உபகாரியின் சகோதரன்.

எனது பிரியசகோதரனுடைய வேண்டுகோளைக் கவனிக்கப்புகும்போது அடியில் வரைந்துள்ள எனது விண்ணப்பத்தையும் சற்றாராய்ந்து மனமிரங்கி எனது மனோரதத்தை நிறைவேற்றுமாறு வேண்டுகிறேன்.

பண்டைக்காலந்தொட்டு நம்தேயத்து ஆரியர்கள் ஓர்மனைவியிருக்க மற்றொரு மனைவியை மணம்புரிவதைக்கேட்டும்இருக்கிறோம்.இப்பால் வழுவாது அவ்வழக்கம் தொடர்ந்து வரக்கண்டும் வருகிறோம்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களின் முதல்மூன்றும் புத்ரபாக்கியமில்லாதவர்களுக்குக் கிடைப்பதரிதெனக் கருதி ஸ்மிருதியில் புத்ரனில்லாதவர்களைச்சிற்சிலசடங்குகளிற்சம்பந்தப்படுத்தாது விலக்கியிருக்கக்காண்கிறோம்.தவிநாம் ஓர் கன்னிகையைமணக்கும்போது 'தர்மம்' 'பிரஜை' இவைகள்பெருகும்படியனைவிரும்பிநானுன்னைவிவாஹம்செய்துகொள்ளுகிறேன், எனச்சங்கல்பித்து பாணிக்கிரகணம் செய்து வருகிறோம்.

இவ்வண்ணம் புகழ்ப்பெற்ற புத்ரபாக்கியம் தம்பதிகளுக்கு, பலநோய்களாலோ தெய்வீக துர்பாக்கியத்தினாலோ, அல்லது எந்தக் காரணத்தினாலாவது கிட்டாவிடின் மற்றொரு கன்யையைமணம்புரிகிறார்கள் சிலர்.

இறைவனருளால் எல்லாவிதபாக்யங்களும் நிறைந்து தேகவலிமையும் குறையாதிருப்பின் கேவல காமபோகத்தை விரும்பி வேறு கன்யையை மணம்புரிபவர் சிலர்.இதுநிற்க தம்பதிகளுக்கு ஒருவருக்கொருவர் ஒற்றுமையின்றி வெறுப்புற்று மனைவியை உணவுக்கேற்ற பொருளைக்கொடுத்து விடுத்து வேறுமணம் புரிபவர் அநேகர்.

காரணம் தெரிந்தும் தெரியாமலும்வெகுகாலமாய்நடந்தேறிவருகிறஇவ்வழக்கத்தை நன்குணர்ந்தவநேகஇரண்டுபெண்டாட்டிக்காரனதைகளுமுண்டு.

பிரகிருதத்தில் அப்படிப்பட்ட புத்ரபாக்கியம் பெறுவதினுலுண்டாகும் பயன் தம்பதிகள் இருவரையும் பொருத்ததாகத்தானே கருதல் வேண்டும்.

புருஷர்களுக்கு வேறு விவாகம் செய்துகொள்ள கொடுக்கப்பட்ட அதிகாரத்தைவன்மற்ற சகோதரிகளுக்கும் ஏன்கொடுக்கக்கூடாதோ?

சிற்றின்பங்களையனுபவிக்கவும் ஆடவர்கள்வேறுமணம் புரிகிறார்களே நம்சகோதரிகளுக்குஎன் அவ்வருமைச்சுகம் கூடாதோ?அதைச் சம்மதியாவிடினும் ஒருபுருஷன் வீர்யமில்லாதவனென்று காணப்பட்டால்? மறுபுருஷனைமணம் செய்து கொள்ளல் ஏன் சிறுமிகளுக்காகாதோ? ஐயோ இதென்ன அந்நியாயம். புருஷர்களுக்கொரு சாத்திரம் பெண்டுகளுக்கொன்றோ? ஏராளமான பொருள்களை யாண்டு தன் பொருள்களையாள வருமைப்புதல்வனொருவனில்லாமற் சுவீகாரம்எடுத்து அச்சுவீகாரம் செல்லும் செல்லாதென நியாயஸ்தலங்களில் வழக்கிட்டு அந்நியாயமாய் பொருள்சேதமாகின்றதே.ஒரு புருஷன் சொத்துகளைப் பலபெண்டீர்களின் புத்ரர்கள் சமபாகமாய் அடைவது போல் பல புருஷர்களுக்கு ஒருமனைவினிடத்துதித்த சத்புத்ரன் அத்திரவியங்களையடையப் பாத்தியமில்லாமற் போவதேனோ?

ஒருமனைவிக்கு பலபுருஷர்களிருக்கலாமென்பதற் காதாரம்ரமது வியாசபகவானருளிச் செய்த மகாபாரதத்தில் காணப்படுவது தென்படாதமேதமோ?

ஆரியர்காள்! இதுவரைபோனது போகட்டும் ஆங்கிலம்முதலிய பல்நூற்களைக்கற்று மகாமேதாவிகளாகிய உங்களால் இதற்குவழிபிறக்காவிடில் வேறு சமயம் வாய்ப்பதுஅரிது ஆகையால். விதவைகளின் விஞ்ஞாபனத்தை ஊக்கத்துடன் கவனிக்குங்கால் என்சிற்றறிவிற்றோன்றிய இந்த நியாய விஷயத்தையும் யோஜித்து நியாயமுரைத்து பரிதாப நிலமையிலுள்ள பெண்டுகளின் கஷ்டத்தை நிவர்த்திக்கின்றேன் விதவைகளின் விஞ்ஞாபனத்திற்குப்போட்டியென்றுகைவிடாதீர்கள்.

உபகாரியின் சகோதிரன்.

## புத்தகவரவு.

**கரும்பலகைச்சித்திரம்** (பிளாக்போர்டு டிராயிங்) இப்புத்தகம்; இதனை இயற்றியவராகிய, சைதாப்பேட்டை கவர்ண்மெண்ட்டிரைனிங் பாடசாலை உபாத்தியாயர் மகா-ள-ள-ஸ்ரீ ஏ. சுப்பிரமணிய ஐயர் அவர்களால் அனுப்பப்பெற்றோம். இது தற்கால எலிமெண்டரி, டிரைனிங்பாடசாலைகளுக்கு அதிக பயன் படுமாறு இயற்றப்பெற்றிருக்

கிறது. அநேக அழகான சித்திரங்கள் எழுதப்பட்டிருப்பதோடு அவை வரைவதற்கான இடங்களும் ஆங்காங்கு கூறப்பட்டிருக்கிறது. ஆகவே இவ்வருமையான புத்தகமியற்றிய ஆசிரியருக்கு நாம் எல்லோரும் நன்றிபாராட்டக்கடமைப் பட்டிருக்கின்றோம். இதன் விலை அணா 12.

பத்திராதிபர்.

**ஒரு பரிதாபமான கொலை:**—காஞ்சி புரத்திலிருக்கும் ஒருவர்த் தகருடைய 17-வயதுள்ள பெண் சென்ற அமாவாசையன்று காணாமற்போனாள். நவாஜா பேட்டைத் தோட்டத்திலிருக்கும் கிணற்றில் அந்தப்பெண்ணின் பிரேதமிருக்கக் கண்டார்கள். அவளணிந்திருந்த 1000-ரூபாய் நகைகளை அபகரித்துக்கொள்ளும் பொருட்டே அவளைக் கொன்றிருத்தல் வேண்டும். கொலையாளி இன்னும் அகப்படவில்லை.

**குழந்தை தாலாட்ட எலக்டிரிக் தொட்டில்:**—மின்சார சக்தியினால் எவ்வளவோ அற்புத வேலைகள் நடந்துவருவதைக்கண்ணாரப் பார்க்கின்றோம். மின்சார சக்தியினால் செய்யக்கூடாதவேலை யொன்றுமேயில்லை. நாள் தோறும் புதிது புதிதாக ஒவ்வொரு வேலையிலும் மின்சார சக்தியை உபயோகப்படுத்திப் பலசாதகங்கள் அடைந்துவருகிறார்கள் ( தற்போது பாரிஸ்நகரத்தில்மின்சாரசக்தி அமைக்கப்பட்ட தொட்டில் ஒன்று கண்டு பிடித்திருக்கிறார்களாம். அத்தொட்டிலில் படுக்கவைக்கப்படும் குழந்தைஅழுதால் உடனே மின்சார இயந்திரங்கள் வேலைசெய்யத்தொடங்கி தொட்டிலை அசக்கி ஆட்டிக் கொண்டிருக்குமாம் அப்போது அதில் அமைக்கப்பட்டுள்ள கிராமபோன்வாத்தியம் தாயார் பாடுவதுபோல் பாடஆரம்பித்து குழந்தையின் அழுகை ஓய்ந்து நித்திரை செய்யும்வரைக்கும் தொட்டிலாடிக்கொண்டும் கிராமபோன் பாடிக்கொண்டுமிருக்குமாம். இதனால் தாய்மார்களுக்கு எவ்வளவோ அனுகூலமாயிற்றென பாரிஸ் பத்திரிகை யொன்று சந்தோஷங்கொண்டாடுகின்றது.

கு-பு-ணி.

**அநியாய நரமேதம் 41 பெயர் மாண்டனர்:**—சாத்தூர் தாலூகா மூள்ளுச்செவல் என்ற கிராமம் நள்ளிரெயில்வே ஸ்டேஷனுக்கடுத்துள்ளது அதில் 9—6—12-ல் ஒரு வண்ணானுக்குகலியாணம் நடந்தது 10—6—12 இராத்திரி ஒரு விரோதியால் கலியாண வீட்டுக்கு முன் கதவின் சங்கிலியைப் போட்டு தீவைக்கப்பட்டது வீட்டினுட் சுமார் 45 ஜனங்களிருந்தார்கள். 35 பெயர் கருகி வெந்து மாண்டனர். 10 பெயர் கூரையைப்பிரித்து வெளியிற் குதித்துத் தப்பினர். ஆயினும் அவர்களுக்கும் பலவிடங்களில் தீப்பட்ட காயங்களும், கருகல்களுமுண்டு. அவர்களிலொருவன் ஆசுபத்திரியிலிருந்து இறந்தனன். பெண்மாப்பிள்ளைகளுக்குக் கெடுதிசெய்ய இத்தீ வைக்கப்பட்டாலும் அவ்விருவரும் வெளியிலுள்ள வேறு வீட்டில் படுத்திருந்தமையால் அவர்கள் உயிர் பிழைத்துக்கொண்டனர். கருகிப் பிழைத்திருந்தவர்களில் பின்னும் 5 பெயர் மாண்டனர். அநியாயம்! ! சு-மி. (உ-ன்)

**பறக்கும் பைசிக்கல் வண்டி.**—சிலவருடங்களாய் ஆகாவிமானங்களில் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் மிகுந்ததேர்ச்சியடைந்துவருகிறார்களென்றறிவோம். இப்போது பாரீஸ்பட்டணத்தில் பறக்கும் வண்டி விடுவதில் கவனம் செலுத்திவருகிறார்கள். யாதோர் இயந்திரத்தின் இயற்கையின்றியும் புஜபலத்தின் உதவியைக்கொண்டு மாத்திரம் தரையிலிருந்து 32 அடி கிளம்புகிறவனுக்கு 490 பவுன் சன்மானம் கொடுக்கிறதென்று பாரீஸ் நகரத்தில் விளம்பரம் செய்யப்பட்டது 198 பேர் வரையில் இந்த அருமையான பந்தயத்துக்குத் தங்கள் பேரை எழுதிவைத்தார்கள். துவிச்சக்கர வண்டி விடுவதில் மகாசமர்த்தனான மூஸிய லவலாத் (Lavalade) என்பவன் மூவிஸி பட்டனத்தில் இறக்கையுள்ள பைசிக்கிள் வண்டியில் ஏறி, ஓர் கயற்றின்மேல் பறந்து தாண்டினார். ஆயினும் குறிக்கப்பட்ட உயரம் கிளம்பாதபடியால் பந்தயத்தை அவன் ஜெயிக்கவில்லை. இந்தப்புதுவகையான கமனத்திற்கு (Aviette) அவியெத் அதாவது சிறு கமனம் என்றபேர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகாயக்கமனத்தில் இன்னும் என்னென்ன அதிசயங்கள் நடக்கப்போகிறதோ தெரியவில்லை.

**தூக்கத்தில் தலைமேல் கல்லைப் போட்டுக்கொன்றார்கள்:**—கோவிற்பட்டித் தாலுகா இடைசெவலில் இரண்டு வாரங்களுக்கு முன் ஒரு வேளாளன் செட்டி வீட்டில் அடுத்த வீட்டு நாயக்கன் படுக்கை விரித்துப் படுத்திருந்து நடுஇராவில் எழுந்து தன் வீட்டுக்குப்போய் விட்டான் பிறகு அவ்வீட்டுச்செட்டி அதிற் படுத்துக்கொண்டான் அவன் உறங்கப் பார்த்து பெருங்கல்லைத் தலையிற்போட்டுக் கொன்று விட்டு ஓடிப்போனார்கள். இதில் சம்பந்தப்பட்டதாகச்சிலரைச்சந்தேகத்தின் பேரில் பிடித்துக்கேஸ் நடக்கிறது. வெளித்திண்ணைகளிற் படுத்துக் காற்றின் சுகத்தை அநுவிப்பதில் இத்தகைய ஆபத்துகள் உண்டாகின்றன.

**ஒருவர் உயிருடன் புதைக்கப்பட்டார்:**—காலீஷ்யாகுராவிக்காவிலிருக்கும் மாஸ்னியென்னும் ஒருபோலீஸ் தனவான் வலியினால் கீழே விழுந்துவிட்டார். ஊரில் டாக்டர் ஒருவருமில்லாமையின் ஒரு வெட்டிரிநெரி சர்ஜன் அவரிறந்து போயினரென்று சர்டிபிகேட்கொடுத்தனர். அவருடைய பந்துக்களெல்லாருங்கூடி அவரைப்பெட்டியிற் சேமஞ்செய்து கல்லறைக்குக்கொண்டுபோயினர். அங்கு கிரியைகளெல்லாம் முடிந்தவுடன் பிரேதமிருந்தபெட்டி கல்லறையில் வைக்கப்பட்டது. அப்போதுபெட்டியிலிருந்து ஒருசத்தமுண்டாயிற்று. உடனே பெட்டியைத் திறந்துபார்த்தனர் மாஸ்னி என்பவர் உயிரோடிருக்கக் கண்டனர் அவர் எழுந்திருந்து தமது வீட்டிற்கு யாவரும் அதிசயிக்குமாறு சென்றனர்,

**பஞ்சத்திலடிபட்டு வருந்தும் ஜனங்கள்:**—பம்பாய் மாகாணத்திலே 39, 51, 000 ஜனங்களுக்குக் குறையாமலும், மத்திய இந்திய

நாடுகளிலே 1, 82, 988 ஜனங்களுக்குக் குறையாமலும்; பரோடா சமஸ்தானத்தில் 1, 01, 043 ஜனங்களுக்குக் குறையாமலும் பஞ்சகால ஜீவனஞ்செய்துவருகிறார்களென்று தெரிகிறது.

**நூதன சத்திர வைத்தியம்:**—தந்தியில்லாமலே மின்சார வர்த்தமானங்கள் நடைபெறுகின்றன. இம் மின்சாரசத்தினால் நூதனமுறையான சத்திரவைத்தியமும் நடத்தலாமென்பது இப்பொழுதுதெரியப்படுகின்றது மெக்சிகோ குடாவிலுள்ள சுவான் என்னும் தீவில் வைத்தியமுறைகள் தெரியாது. கால்முறிந்து நசிந்த ஒருவனை சிகிச்சைசெய்ய அங்கொருவருமில்லை. அங்கே தந்தியற்ற மின்சாரவேலையை நடத்துபவர் சமீபமான இடத்தில் நின்ற கப்பலின் வைத்தியனைவரவழைக்க, அவர் மின்சாரசத்தினால் அவனுக்குச் சத்திரவைத்தியம் நடத்தியபின் நோயாளி குணமடைந்து வருகின்றானாம்.

**இந்தியாவில் செலவாகும் உப்பு:**—வங்காளம், சென்னை, பம்பாய் பர்மா, இந்த தேசங்களில் ஏப்ரல் மே ஜூன் ஆகிய மூன்றுமாதங்களில் செலவாயிருக்கும் உப்பின் மொத்த அளவு 12577-ஆயிரம் மணங்கென்று கணக்கிடப்பட்டிருக்கிறது; சென்ற வருஷத்தில் செலவான உப்பின் அளவைக்காட்டிலும் இவ்வருஷம் 476-ஆயிரம் மணங்குஉப்பு அதிகமாகச்செலவாயிருக்கிறது. மொத்தவரும்படி 12611 ஆயிரம் ரூபாய் என்று சொல்லப்படுகிறது. உப்பின் வரிவிகிதம் அப்போதுக்கப்போது மாறிக்கொண்டுவந்தது. ஆனால் பர்மாவில் மட்டும் மணங்கு ஒன்றுக்கு ஒரு ரூபாய் விகிதம் உப்பின் வரி ஸ்திரமாக ஏற்பட்டது.

**மைசூர் யுவராஜாவுக்கு நேர்ந்த விபத்து:**—இந்தியாவில் போலோ விளையாட்டில்சமர்த்தர்களுள் H. H. யுவராஜாவும்ஒருவர். அவர் எப்பேர்கொத்த துஷ்டக்குதிரைகளையும் அடக்கி ஆளும் திறமையைப் படைத்திருக்கிறார். சென்றவாரம் அவர்போலோ விளையாடிக்கொண்டிருக்கையில் அவர் குதிரை கால் இடறிக் கீழேவிழுந்தது. அதில் அவருக்குப் படுகாயம் உண்டாக்கிச் சிலநிமிஷங்கள் வரையிலும் ஸ்மரணையற்றிருந்தார் தர்பார் சர்ஜன்செய்த சிகிச்சையால் இப்பொழுது செளக்கியமாக இருக்கிறார். என்று கேட்டுச்சந்தோஷப்படுகிறோம்.

**EMPIRE OF INDIA LIFE ASSURANCE Coy. (LTD.)**

**BOMBAY.**

Advantages: Purely Indian; Absolute Government Security: Premiums lower than English or Foreign Companies; High Surrender Values; Loans 6%; Quick settlement of claims &c. Please Apply to:—

# ஆசார சீர்திருத்த முறையும் நோக்கங்களும்.

அன்புமறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது—குறள்.

அருமைச் சகோதரிகாள்!

உலகெலாந் துதிக்கு மிறைவனருளால் நாமெல்லா மிப்புண்ணிய பூமியிற் பிறந்து வெகுவா யொரேவித பழக்க வழக்கங்களை யனுசரித்தும், ஒப்பற்ற இந்து மதத்தைத் தழுவியும், ஒரே பாஷையி லொருவரோ டொருவர் கலந்து வார்த்தையாடிக் கொண்டும் வருகின்றோம். ஆகையினால் நாமெல்லோருமொரே குடும்பத்திற் சேர்ந்த சகோதரிகள்போ லிருக்கவேண்டு மென்பதற்குச் சற்றேனுமைய முண்டோ? இதைப்போலவே நஞ் சகோதரர்களும் கல்வி கேள்வி முதலியவைகளிற் றேர்ச்சி யடைந்து பல தேசங்களைக்கண்டும், அவைகளைப்பற்றி புஸ்தகம்; பத்திரிகை மூலங்களாற் கற்றும், உலகம் நாளடைவில் நாகரீகத்தி லுயர்வதைக்கண்டு தாங்களும் தங்கள் சகோதரிகளும் நாகரீகத்திலுயர வேண்டு மென்றும் பேரவாகொண்டு முள்ளார்கள்.

ஆனால் நம்சகோதரர்களதிகமாய்ப் படித்துமென், பல பத்திரிகைகள் பதிப்பித்து மென், பல பிரசங்கங்கள் செய்து மென், அவர்களெல்லா மொற்றுமையாயிருக்க முயன்று மென், அவர்கள் கற்றவாறும் நினைத்தவாறும் சொல்லியவாறும் நடக்கவியலா திருக்கின்றனர். வண்டியிற் பூட்டிய மாடுகளிரண்டு மொருமனத்தா யொரே வழியிற் சென்றால் வண்டியும் வழி நடந்து செல்லும். அப்படி யில்லாமல் ஒருமாடு ஒருபக்கம் படுத்துக் கொண்டிருக்க மற்றொன்று அதிவேகத்துடன் செல்ல முயலுமானால் வண்டி நேராகச் செல்லா தென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோற் புலப்

படுகின்றது. அதுபோல நாமும் நஞ் சகோதரர்களெண்ணங்களி லும் அவர்கள் பிரேரேபிக்குஞ் சீர்திருத்தங்களிலும் மனமொத் தவர்களாய் தகுந்த உதவிகளைப் புரிந்து வரல் வேண்டும்.

நம்மவருட் சிலர் நன்கு வாசித்து உலக நாகரீகம், சரித்திரம், சீர்திருத்தம் முதலியவைகளைத் தெரிந்துணர்ந்த சீமாட்டிகளிருக் கின்றனர். இவர்கள் தங்கள் சகோதரிகட்கு கல்வி புகட்ட முயன் றும் புகட்டியும், பல சீர்திருத்தங்களின் நோக்கங்களை விளக்கிக் காட்டியும், பெண்மணிகளை யடிக்கடி கூட்டங் கூட்டியவர்களுக்கு பிரசங்க மூலமாக தற்காலம் நம்மவர்களுக்குள் அனுஷ்டானத்தி லிருந்து வரும் பற்பல துராசாரங்களா லுண்டாகும் கெடுதிகளை யெடுத்து விளக்கிக் காட்டியும், இதையொப்ப ஆண்டு பத்திரிகை கள் மூலமாக தங்களா லாழ்ந்து யோசித்து தீர்மானிக்கப்பட்ட விஷயங்களைப் பற்றியெழுதி சகோதரிகள் வீடெங்கும் பரவச் செ ய்யவும் வேண்டும்.

கீழே குறிப்பிக்கப் பட்டிருக்கின்ற சிற்சில விஷயங்களைப் பற்றி தனித்தனியாக விவரித்து அவைகளாலேற்படும் நன்மை களைப் பலரறியுமாறு பகிரங்கப்படுத்தி சகலருடைய சம்மதத்தை யும் பெறுமாறு கூடியவரை யுழைப்பதே சத்காரியமாகும்.

1. பெண்கல்வி யபிவிருத்தி செய்தல்.
2. பால்ய விவாகத்தைத் தடுத்தல்.
3. நாகரீகர் பழிக்கும்படியான பிரயோசன மற்ற வீண் செ லவு கொள்ளும் பல சடங்குகளை நிறுத்துதல்.
4. சமபந்தி போஜனஞ் செய்தல்.
5. கூடியவரையில் சிறு ஜாதிப்பிரிவினைகளை யொழித்து ஐக் கியப் படுத்துதல்.
6. பாத்திரமறிந்து பிச்சையிடுதல்.
7. பால்ய பெண்களை வயதின் மூத்தோர்க்கு மணஞ்செய் தலைத் தடுத்தல்.

மேற்கூறிய பல்வித சீர்திருத்தங்களைச் சிலரனுஷ்டானத் துக்குக் கொண்டுவந் திருப்பது வாஸ்தவமே யாயினும் பலரு மவ்வழி நடக்க விணங்கச் செய்யல்வேண்டும். ஒவ்வொருவருடமு மாசாரச் சீர்திருத்தக்கூட்டம் பற்பல விடங்களிற் கூடுவதும்,

அநேக விஷயங்கள் தீர்மானிக்கப் படுவதும் வழக்கமாயிருந்துங் கூட அவ்வாறொன்றுஞ் செய்யப்படாததற்கு காரணம் இவ்விஷயத்தில் சகோதரர்களுக்கு நம்முடைய கூட்டுறவில்லாதது பற்றியேயன்றி வேறல்ல. நமது சம்மதமின்றி யவர்கள் பல பிரசங்கங்கள் செய்யினும் வீணேயாகும். நஞ்சகோதரர்கள் நம் உதவியின்றி ஒரு காரியமுஞ் செய்ய வியலாது. அங்ஙனஞ்செய்ய முயல்வது ஒரு சிறகை விரித்து பறக்க முயலும் பட்சியைப் போலாம். அச்சமின்றி நஞ்சகோதரர்கள் நமக்கு வேண்டிய கல்விப் பயிற்சியை கொடுத்து நம் நாட்டிற்கு நன்மையைத்தரும் நோக்கங்களையுஞ் சீர் திருத்தங்களையும் நமக்குப் பேதமற விளக்கிக் காட்டி நம்முடைய ஒத்தாசையைப் பெற கடமைப் பட்டவர்களா யிருக்கின்றார்கள். அது நிற்க நம்முடைய கடமைகளையும் நாம் சற்று கவனிக்கவேண்டும். பயிற்சிக்கு வேண்டிய சகல காரியங்களையும் சகோதரர்களாற் செய்யபோதிய அவகாசமும் ஆற்றலுமில்லை யாகையால் நாம் நாமே கூடியமட்டும் கல்வி முதலியவைகளிற் பயின்றும் பயில் வித்தும் வரவேண்டும்.

ஐரோப்பிய தேசங்களில் நம்மைப்போன்ற பெண்மணிகள் கல்வியிற் சிறந்து விளங்குவதோடு மநேகவித துராசாரங்களை நாளடைவில் நீக்கியும் வருகின்றார்கள். நார்வே யென்னுந் தேசத்தி லொரு பெருமாட்டி 'பார்லிமெண்டு' என்னுஞ் சபைக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். நாமும் சீக்கிரத்தில் நாகரீகத்திலுயர வேண்டும். இந்திய மாதர்கள் மற்றைய தேயத்து மாதர்களைக் காட்டிலும் மேலான குணங்களையும் நடத்தையுமுடையவர்களென்று உலகப் பிரசித்தி பெற்றிருக்கின்றார்கள். அக்கீர்த்தியை நிலை நிறுத்துவதோடு மட்டும் நிற்காமல் நாளுக்கு நாள் பூர்வபக்ஷத்து சந்திரனைப்போல் விர்த்தியடையச் செய்வதையே நமது நோக்கமாசக் கொள்ளவேண்டுமேயன்றி க்ஷீணமடைய விடுவது விவேகமற்ற காரிய மாகும். நாளடைவில் படிப்பு விர்த்தியாகிக்கொண்டு வருவது காரணமாக பண்டைய நாட்கள் தொடங்கி மாறுமல் நடந்து வரும் பலவித மார்க்கங்கள் மாறுபடுவதவசியமாதல் பற்றியும், ஸ்திரீகளினுதவியின்றி புருடர்களால் மட்டும் நம்மில்லின்கண் நடக்கவேண்டிய க்ாரியங்கள் நடை பெறுதல் சாத்தியமல்லாதது பற்றியும்,

கஞ்சகோதரர்களுக்கு உதவி புரியும் காரண நிமித்தமாக பற்பல விடயங்களை நாம் நன்றாயாலோசித்து சமயம் வாய்த்தபோது பின்வாங்காமலொன்றாய் கூடி யாதொரு காரியமும் விவேகத்துடன் செய்யல் வேண்டும். ஓர் கட்டிடமானது வெகு நாளைக்கு நிலைத்திருக்க வேண்டுமென்ற எண்ணமுடையவ னெவ்விதமாக அஸ்திவாரக் கற்களை பலமாய் போட்டு வேலையை ஆரம்பஞ் செய்வானோ அதுபோலவே சீர்திருத்தங்கள் பலமாக வேரூன்றி நிற்க வேண்டு மென்ற வெண்ணத் துடனுழைப்போர்கள் மெதுவாக ஒவ்வொரு காரியங்களா லுண்டாகு நன்மைகளை பிறர்க்கு விளங்க வெடுத்துக்காட்டி பலருடைய சம்மதத்தின்பேரில் நியாயமான வழியில் நடக்க வஞ்சமாட்டார்கள்.

இவ்வித துண்டு பத்திரிகைகள் அடிக்கடி வெளிவருமாதலினவைகள் கிடைக்கப்பெற்ற சகோதர சகோதரிகள் தாங்கள் வாசித்தும் வாசிக்கத் தெரியாத மற்றைய சகோதரிகளுக்கு விளங்கச் சொல்லியும் வருவார்களாயி னெமதெண்ணம் சீக்கிரத்தில் நிறைவேறி பலவித திருத்தங்களை செய்ய முடியுமென்பதிற் சிறிதுந் தடையில்லை.

இவ்வித மார்க்கங்களை யெடுத்துக்காட்ட நம்மவர்களில் வாசித்தறிந்து மேன்மை பெற்ற சகோதரிகள் முன்னுக்கு வருவார்களென்பதிற் சந்தேகமில்லை. மேற்சொன்ன விஷயங்களைச் சகோதரிகளடிக்கடி யெழுதி "ஆசார சீர்திருத்த பத்திராசிரியர், வேப்பேரி போஸ்ட், சென்னை, N.C." என்ற விலாசத்திற் கனுப்பின் துண்டு பத்திரிகைகளாகப் பிரசுரஞ்செய்து சகோதரிகள் வீடெங்கும் பரவச் செய்தும் வர சித்தமாயிருக்கிறேம்.

"ஆசாரநிலையம்"
வேப்பேரி, சென்னை, N. C.
15—5—1912.

தங்கள் பிரிய சகோதரி,
ஜனகம்மாள்.

2nd Edn. 3000: 15-6-12. Meykandan Press, Madras, N. C.

ஆசார சீர்திருத்தம் மலர். 2. Social Tract No. 2.

# பெண்களுக்கு கல்வி அவசியமா?

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்—குறள்.

ஆரிய சகோதரிகளே!

பிரபஞ்சத்தில் மானிடவுருக்கொண்டு பிறந்த ஆண் பெண் சகலருக்கும் பாஷா ஞான மியல்பாக வுண்டென்பதும், மற்ற ஜந்துக்களைப்போலல்லாமல் பேசுந் திறமிருத்தலால் தங்கருத்தை பிறர்க்கு வெளியிடவும் பிறர் கருத்தை கிரகிக்கவும் சக்தியுடையவர்களா யிருக்கிறார்க ளென்பதும் தடையில்லாம லொப்புக் கொள்ளக்கூடிய விஷயங்களாகும். இவ்வியல்பு ஸ்திரீ புருஷ பேதமின்றி ஈஸ்வரனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்க சிலர் கல்வியானது ஸ்திரீக ளுக் கவசியமில்லை யென்று கூறுகின்றார்கள். இம்மட்டோடு நிற்காது வேறு சிலர் கல்வி கற்பதனால் ஸ்திரீகள் துன்மார்க்கமான வழியை கடைப்பிடித்து கெட்டுப் போகின்றார்க ளென்றும் ஆகையினால் அவர்களைப் படிக்கவைப்பது மதியீனமெனச் செப்பியும் வருகின்றார்கள். ஆயினு மித்தகைய தப்பெண்ணங் கொள்ளுகிறவர்கள் நாட்கள் செல்லச் செல்ல குறைந்துகொண்டு வருகின் றார்கள். பரதகண்டத்திலுள்ள ஆண்பிள்ளைகள் வாசிப்பில் தேர்ச்சி யடைந் தவர்களாய் நாளடை விலத்தகைய வாசிப்பின் பயனாக மதியீனத்தாற் கொண்ட பலவித துரெண்ணங்களை மாற்றி வருதலினாலும், பொதுவாக வாசிக்கும் ஆண் பிள்ளைகளின் தொகை வருஷா வருஷ மதிகரித்து வருதலி னாலும், மேற்சொன்ன தப்பெண்ணங் கொள்ளுகிறவர்களின் தொகை குறை ந்துகொண்டே வருகின்றது. இன்னுங் கொஞ்ச நாட்களில் பெண்களுக்கு கல்வியவசிய மென்ற விஷயத்தை மனப்பூர்வமாக வெல்லோருஞ் சொல்லு வார்களென்றே யெண்ணங்கொள்ள வேண்டியிருக்கின்றது.

"பெண்களுக்கு கல்வி கூடாது, அவர்கள் கல்வி கற்பதால் கெட்டுப் போகிறார்கள்" என்று சொல்லுபவர்களின் கொள்கைகளைச் சிறிது ஆராய்ந்து பார்க்குமிடத்து அத்தகையோருடைய அறியாமை நன்கு புலப்படும். பெண்

களுக்குக் கல்வி கற்பிக்கு மிடத்து சிறிது காலஞ்சென்றபின் கற்றதின் பயனாக சில சுதந்தரங்கள் கொடுக்கவேண்டி வருமெனப் பயந்தோ, தங்கள் குடும்ப க்ஷேமத்தைக்கோரி வீட்டின் வேலைகளை சிரத்தையோடு பிறருதவியின்றி செய்யமாட்டார்களென அஞ்சியோ, அல்லது தங்களுக்கு சமமான ஸ்திதிக்கு பெண்மணிகளைக் கொண்டு வரும் பக்ஷத்தில் பிறர் நகைப்பார்களென நினைத்தோ இவ்விதமான கோணலான எண்ணத்தை வகித்தவர்களாயிருக்கிறார்கள். ஒரு காரியஞ் செய்யத் துணிவதிலித்தகைய யோசனைகளிருக்க வேண்டியது முக்கியமே யானாலும் சிறிது ஆழநோக்குவார்களேயாகில் தவறான வெண்ணங்கொண்டதற்கு தாங்களே துக்கிப்பார்கள். ஏதோ தங்கள் கண்ணுக்குத் தோன்றின விரண்டொரு விடயங்களாலொரே தீர்மானத்துக்கு வந்து யோசனையின்றி பலர்க்குஞ் சொல்லி வருவது நியாயமுமன்று நீதியுமன்று.

ஸ்திரீகளுக் கேற்பட்டிருக்கும் கடமைகளை நினைக்கு மிடத்து புருஷரைவிட கடினமான வேலையைச் செய்ய கடமைப்பட்டிருக்கிறார்களெனத் தெரியவரும். ஒரு தேசத்தரசனைவிட மந்திரியானவனெவ்விதமாக மேம்பாடுடைய புத்திசாலியா யிருக்கவேண்டுவ தவசியமோ அவ்விதமாக தங்கள் பர்த்தாக்களுக்கு உற்ற விடத்து யோசனைகளைச் சொல்லவும் அவர்கள் துக்கப்படுங் காலத்து வேண்டிய ஆறுதல் சொல்லி துக்கத்தை தாங்கள் வகித்துக்கொள்ளவு மிருத்தலோடுகூட தாய்மார்களான காலத்தில் தேசத்தின் நன்மையையும் குடும்பத்தின் விர்த்தியையுங் கோறினவர்களாய் சன்மார்க்கத்தில் தங்கள் குழந்தைகளை நடத்திவரும்படியான பொருப்பும் ஸ்திரீகளின்மேலே யிருக்கின்றனவே யன்றி இவ்விஷயங்களின் பொருப்பு புருஷர்களுக் கவ்வளவு இடையாது.

புத்திவன்மையிலேனும் மற்றெந்த ஒழுக்கங்களிலேனும் இத்தேயத்துப் பெண்கள் மற்றதேசத்துப் பெண்களைக் காட்டிலும் தாழ்ச்சி யடையார்களென்பது நிச்சயம். முற்காலத்திலோ சீதை, துரௌபதை, சாவித்திரி, நளாயினி முதலிய கற்புக் கரசிகள் தத்தம் அறிவிற் சிறந்த கணவரோடும் முனிவர்களோடும் தேவர்களோடுங்கூட தத்துவ விஷயங்களைப்பற்றி சம்வாதித்தும் போராடியு மிருப்பதாக நமது நூல்களுரைக்கின்றன. இவர்கள் வாசிப்பின் மேன்மையால் கற்புமிகுந்து பிரகாசித்ததும் தங்களுக்கு கஷ்டகாலம் வந்த காலத்தி லியல்பாக தெய்வகிருபை யேற்பட்டதும் சகலரு மறிந்த விஷயங்களேயாகும்.

பெண்கள் அப்பொழுது தாங்களடைந்திருந்த கல்வியாலும் சுதந்தரத்தாலுங் கர்வங்கொண்டு தமக்கேற்பட்டுள்ள வீட்டுவேலைகளைச் செய்யாமல்

விட்டு விட்டனரா? தங்கள் தாய்தந்தை பர்த்தா இவர்களுக்குச் செய்யவேண்டிய முறைகளினின்றும் வழுவினர்களா? தங்களிஷ்டப்படி மனம்போன போக்கெல்லாஞ் சென்று பிறர் நகைக்க மார்க்கந்தேடிக் கொண்டார்களா? ஒருபோதுமில்லை. இவர்களே தாயார்க்கும் மனைவியர்க்குமுள்ள கடமைகளைக் குறைவுறாது செய்து பேர் பெற்றவர்கள். இப்படியிருக்க சரியான வழியில் பெண்மணிகளுடைய கல்வியை விர்த்தி செய்தால் நாட்டுக்கு க்ஷேமமே வருமென்பது சொல்லாமலே விளங்கும்.

சற்றுப்படிக்கவும் எழுதவுங் கற்பின் பெரும்பாலும் ஸ்திரீகள் செய்ய வேண்டிய காரியங்களையும் பிறர்பாலொழுகும் மார்க்கங்களையும் போதிக்கும் நூல்களை யவர்களிடம் பயிற்சிக்கு கொடுக்காது, தமது மதக்கொள்கைகளுக்கு விபரீதமாகச் சொல்லப்படும் பாடங்களையும், தேசாசார வழக்கத்துக்கு மாறுபாடாக விருக்கும் காரியங்களையும் அவர்கள் புத்தியிற் செலுத்தி வந்தால், வாசித்து பயனில்லாமற் போவதோடுமட்டும் நிற்காமல் தீங்கு விளைவதிற் சிறிதேனும் சந்தேகமில்லை. இத்தகைய வழிகளைப் பெண்களுக்கு காண்பித்துக் கொடுப்பது வீட்டின் கண்ணுள்ள தாய்மார்களின் தவறேயாகும். நல்ல புத்தகங்களைப் பொருக்கி, வாசிக்க கொடுத்தலும், வாசிப்பின் பிரயோசனமாக வாசித்த வழியில் நிற்க முயலும்படி புகட்டலும், சகவாசம் சரியானபடி யிருக்கின்றதாவென கவனித்தலும், வீட்டிலுள்ள மூத்தோர்களுடைய கடமையாகும். அக்கடமை சரிவர செலுத்தப்பட்டு வருமாயின், நமது தேசத்தில் வாசித்த பெண்களளவற்ற கோடியாயிருப்பதோடு மட்டும் நிற்காமல், இவ்வளவு நாளாக பலராலிகழப்பட்டும் வருகிற அநேக ஒழுங்கீனங்கள் மறைந்தே போயிருக்கும்.

கடைசியாக வொன்று குறிப்பிட வேண்டியிருக்கிறது. நம்முடைய நாட்டிலுள்ள பெண்களுக்கு படிப்பு அவசியமென்று சொல்லுவதாலவர்க ளாண் பிள்ளைகளைப்போல ஓர்வித உத்யோகத்தை யபேக்ஷித்து கற்றுவரல் வேண்டுமென்ற அர்த்தமல்ல. புருடர்களுக்கு தகுந்த பத்தினிகளாகவும் குழந்தைகளுக்கு தகுந்த தாயாராகவு மிருக்கவேண்டுமென்றே யொழிய மற்றெவ்வித எண்ணத்துடனு மிவ்விட மெடுத்துக் கூற வரவில்லை. வாசித்த பெண்களிருக்கும் பக்ஷத்தில் வீட்டுவேலை போக, மற்ற நேரங்களில் புராதன சரித்திரங்களை வாசித்து, சகல நற்குணங்களை யனுசரித்து, துர்க்குணங்களை களைந்தும், வீட்டிலாண்மக்களில்லாத காலத்து குழந்தைகளைச் சீர்படுத்தும் வழியை யறிந்தும் வருவார்களென்பதும் நிச்சயம். அப்படியில்லாதிருக்குமானால் குடும்பத்தில் சுகமில்லாதிருத்தலோடு கூட பசி, தாகம், நித்திரை முதலான உலக விச்சைகளிலாழ்ந்துள்ள மிருக ஜாதிகளினின்று பேதமில்லாதவர்களாய் நாட்களை கழித்துச்செல்ல வேற்படுமேயன்றி மற்றைய பயன் யாதொன்றையுமடைய

மார்க்க முண்டாகாது. ஆகையாலினிமேலாவது தேசத்தின் நன்மையையும், குடும்பத்தின் க்ஷேமத்தையும், யாக்கையின் பயனையும் கருதிய ஆண் பெண் மக்க ளனைவரும் கல்வியாலுண்டாகும் பிரயோசனங்களை யாழக்கருதினவர்க ளாய் தங்கள் பெண்களினிளமைப் பருவத்தை வீணே கழிக்காமல் மேற்சொ ன்ன வழியினடக்க ஒன்று சேர்ந்து வருவார்க ளென்பதே யெமது விண்ண ப்பமாகும்.

ஆண்மக்களுக்கு ராஜாங்கத்திற் பெரிய கௌரவங்கள் கிடைப்பதனா லும், புகைவண்டி, மின்சாரம், புகைக்கப்பல் இவைகளால் சகல சௌகரியங்க ளேற்படுவதாலும், பலவித மார்க்கங்களால் வயல்களில் விளையும் பயிர்களையும் கைவேலைகளாற் செய்யப்படும் தொழில்களையும் விர்த்தி செய்வதாலும் இன்ன மித்தகைய பலவித மார்க்கங்களால் மட்டும் நம்முடைய தேயம் செழிப்புற்று பிரதான நிலைமைக்கு வந்து விடுமென்று நினைத்தல் தவறேயாம். ஆண்மக்க ளுக்குத்தக்க சவரக்ஷணையும் தைரியமும் கொடுப்பதற்குத் தகுந்த மனைவியர் களாகவும் பால்யர்களை சன்மார்க்கத்திற்கு கொண்டு வரும்படியான முயற்சி யைச் செய்வதே நோக்கமாகவுடைய மாதாகவு மிருப்பதற்கு கல்வி இன்றி யமையாததாலும் இத்தகைய கூட்டுறவை புருடர்கள் ஸ்திரீகளிடமிருந்தடைந் தாலன்றி விர்த்திக்கேதுவில்லை யாதலாலும் நாட்டின் நற்காலத்தைக் கோரு கிற யாவரும் எவரெப்படிச் செப்பினும் பெண்கல்விக்காக சிரமப்படுவார்களெ ன்பதில் தடையு முண்டோ?

சென்னை, N. C.
22—2—1912,

தங்கள் பிரிய சகோதரி,
காமாக்ஷியம்மாள்.

[குறிப்பு.—இவ்வித துண்டுப் பத்திரிகைகள் அடிக்கடி பிரசுரித்து சகோ தரிகள் வீடெங்கும் பரவச் செய்வோம். அதற்கு விஷயங்கள் நஞ்சகோதரி கள் எழுதி "பத்திராதிபர், ஆசார சீர்திருத்தம், வேப்பேரி, சென்னை" என்ற விலாசத்திற் கனுப்பும்படி கோருகிறோம். இப்பத்திரிகைகள் வேண்டுவோர்க ளும் மேற்குறித்த விலாசத்திற்குக்கடிதம் எழுதிபெற்றுக்கொள்ளலாம்.—ப-ர்.]

2nd Edn. 3000; 15-6-12. Meykandān Press, Madras, N. C.

வீரியவிருத்திக்கும் இழந்த பலத்தையும் நரம்பு படுத்துவத்தையும்
திரும்ப அடைவதற்கும் உபயுக்தமான இரண்டு உயர்ந்த ரத்னவுர்த்தங்கள்

# மதன மஞ்சரி மாத்திரைகள்.

"நோயுள்ளவர்களுக்கும், நோயற்றவர்களுக்கும்
ஆடவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் உபயோகமானவை"

1. இவை ஜீரண சம்பந்தமான கோளாறுகளைப் பரிகரித்து நல்ல பசியை உண்டாக்குவன.

2, இரத்தத்தை சுத்திகரித்து விருத்திசெய்து தேகத்திற்கு நல்ல திடத்தையும் மேனியையுங் கொடுப்பவை.

3. உடம்பில் ஏற்பட்ட எவ்வித நரம்புத்தளர்ச்சியையும் நிவர்த்தித்து நரம்பு ஸ்தானங்களுக்குப் படுத்துவத்தை அளிக்கத்தக்கவை

4. கை, கால், கண் எரிச்சலைப் போக்கடித்து மூளையைக்குளிரச்செய்து ஞாபக சக்தியை விசேஷித்து தருபவை.

5. ஸ்திரீகளுக்குண்டாகும் கர்ப்பப்பை சம்பந்தமான சகலவித துன்பங்களையும் நிவர்த்திப்பவை.

etc. etc.

40-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.

## நபும்ஸகத்வாரி கிருத்

இக்காலத்தில் சாதாரணமாகவாலிபர்களுக்கு சகவாஸ தோஷத்தால் ஏற்படும் துராப்பியாசங்களால் உண்டாகும் ஜனனேந்திரியநரம்புத்தளர்ச்சிக்கும் ஆண்தன்மைக்குறைவிற்கும் கைகண்ட ஔஷதம்

தோலா கொண்ட டப்பியின் விலை ரூ. 1

எங்கள் ஔஷதங்களையும், அவற்றின் ஆச்சரியமுண்டுபண்ணத்தக்க குணங்களையும் குறித்து, அவ்வௌஷதங்களை உபயோகித்து சௌக்கியம் பெற்றவர்களில் மஹாராஜாக்கள் ராஜாக்கள், ராஜகுமாரர்கள், மந்திரிகள் ஜமீந்தார்கள். அமீர்கள் முதலானோர்கள். ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப்பத்திரங்கள் நாங்கள் தேடாமலும், கேளாமலும் அனுப்பியிருக்கிறார்கள்.

மேலே சொல்லிய மருந்துகளைப் பற்றியும் எங்கள் வைத்திய வித்தியா புஸ்தகத்தை வாசியுங்கள். அது சுகத்துக்கும ஐசுவரியத்துக்கும க்ஷேமத்துக்கும் பெரிய வழி காட்டியாகும்.

இங்கிலீஸ், தமிழ், தெலுங்கு குஜராத்தி, முதலிய எந்த பாஷையில் வேண்டுமானாலும் இந்த புஸ்தகத்தை இனமாக தபால் செலவுகூட இல்லாமல் அனுப்புவோம்.

லக்ஷக்கணக்கான புஸ்தகங்கள் இதுவரை செலவாயிருக்கின்றன

# ராஜவைத்திய நாரயண்ஜி கேசவஜி.

புரோப்ரைட்டர் ஆயுள்வேதோதய ஔஷதசாலை

No. 177, சைனபஜார்ரோட் ஜமேதார் காட்டுக்கெதிரில் சென்னை